Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

திடீரென மழை ஏற்படக் கூடிய வாய்ப்பு உண்டு.
33°C 27°C

பக்கம் 22 | சுடர்: 29 | கதிர்: 151 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 13, வெள்ளி 26.04.2013

# இராணுவமே தாக்கியது உதயன் பத்திரிகையை

## யாழ்ப்பாணத்தில் ரணில் தெரிவிப்பு; பேச்சாளர் திட்டவட்டமாக மறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26
இராணுவத்திற்குள் விசேட உடை தரித்த ஒரு குழுவினரே 'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதலை நடத்தினர் என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார் ஐக்கிய தேசியக் கட்சி தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. இந்த தகவல் தனக்கு இராணுவத்தினிடம்இருந்தேகிடைத்தது என்று அவர் குறிப்பிட்டார்.
உதயன் மீதான தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கும்படி கோருவதுடன்நாடாளுமன்றத்தில்விவாதம் ஒன்றைக் நடத்தக் கோரப்போகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் : பக். 02




எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, சுவாமிநாதன் ஆகியோருக்கு 'உதயன்' பிரதம ஆசிரியர் தாக்குதல் குறித்து விளக்குகிறார்.

> இராணுவத்தில் விசேட உடையணிந்த பிரிவு எதுவுமில்லை. 'உதயன்' தாக்குதல் தொடர்பில் விசாரணை நடைபெறுவதால், ரணில் தனக்குக் கிடைத்த தகவலைப் பொலிஸாருக்கு வழங்கி விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.
> - ருவான் வணிகசூரிய

## ரணிலுக்கு தடை

யாழ்ப்பாணம்,ஏப்.26
வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துள் செல்ல முயன்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினரை இராணுவத்தினர் திருப்பி அனுப்பினர்.
நேற்று மாலை 5 மணியளவில் மாவிட்டபுரம் சந்திக்கு அண்மையில் உள்ள உயர் பாதுகாப்பு வலய எல்லையினூடாக உள்நுழைய முயன்ற இந்தக் குழுவினரே திருப்பி அனுப்பப்பட்டனர்.
இதேவேளை, அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த புலனாய்வாளர்கள் மற்றும் இராணுவ ஊடகப் பிரிவினர் அங்கு வந்தவர்களை ஒளிப்படம் எடுக்க முயன்றனர். இவர்களை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின்பாதுகாப்புப் பிரிவினர் தடுத்துத் திருப்பி அனுப்பினர். (த-5)

## மாகாண தேர்தலுக்கு முன்னர் உதயனை ஒழிப்பதே நோக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.26
'' வட மாகாணத் தேர்தலுக்கு முன்னர் உதயன் பத்திரிகையை முற்றாக அழித்து ஒழித்து விடவேண்டும் என்ற நோக்கத்துடனேயே அதன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கருத்துத் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.
''ஊடகவியலாளர்களைத்தாக்கினார்கள், பத்திரிகை விநியோகத்தர்களை தாக்கினார்கள்,இப்போது பத்திரிகைநிறுவனத்தையே தாக்கி அழித்துள்ளனர்.''என்றார் அவர்.

மேலும் : பக். 02



'உதய'னில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ரணில் மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க.



உலகம் 4 பங்களாதேஷ் விபத்தில் உயிரிழப்பு 142



உள்ளூர் 7 1000 ஏக்கர் படையினருக்கு



விளையாட்டு 16 அடுத்த சுற்றில் சானியா

## இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

யாழ்ப்பாணம்,ஏப்.26
இந்தியாவுக்குச் செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துமாறு அஸ்கிரிய, மல்வத்தை பௌத்தபீடங்களின் பீடாதிபதிகள் இந்திய அரசிடம் கோரியுள்ளனர்.

மேலும் : பக். 02

## கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இன்று அறிவிப்பார் சம்பந்தன்

கொழும்பு, ஏப்.26
பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இன்று நடைபெறும் தந்தை செல்வாவின் 36ஆவது நினைவு தின நிகழ்வின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனின் உரை ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பாக ஏற்பட்டுள்ள முரண்பாடு, வடக்குத் தேர்தல், அரசுடனான பேச்சுகள் குறித்து கூட்டமைப்புத் தலைவர் தமது உரையில் விளக்கமளிப்பார் என்று கூட்டமைப்புடன்நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (த-சி)

## பொதுநலவாய மாநாடு வேறிடம் மாறவேண்டும்

### கனேடியப் பிரதமர் விருப்பம்

ஒன்ராரியோ,ஏப்.26
இந்த வருடம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாடு இலங்கையில் இல்லாமல் வேறு ஓர் இடத்துக்கு மாற்றப்படுவதைத் தாம் விரும்புவதாகக் கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் தெரிவித்துள்ளார். இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் மாநாடு வேறு நாட்டுக்கு மாற்றப்படுவதை தாம் விரும்புவதாக அவர் சூசகமாகத் தெரிவித்துள்ளார். (த-ப)

# இலங்கையில் ஆழக் காலூன்றும் சீனாவின் அடுத்த திட்டம் தயார்



“ இலங்கை அதிகாரிகளுடன், அடுத்த மூன்று தொடக்கம் 5 ஆண்டுகளுக்கான கூட்டுப் பொருளாதார மற்றும் வர்த்தகத் திட்டங்கள் தொடர்பாகச் சீனா பேச்சு நடத்தவுள்ளது.

கொழும்பு,ஏப் 26

இலங்கையுடன் இருபக்க வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்கும், இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்தித்துப் பேசிய போதே, சீனாவின் உதவி வர்த்தக அமைச்சர் சென் ஜியான் இந்த விருப்பத்தை நேரில் வெளியிட்டுள்ளார்.

சீன உதவி வர்த்தக அமைச்சருடன் உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட சீனக் குழுவொன்றும் ஜனாதிபதி மஹிந்தவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

இலங்கை உற்பத்திகள் சீனாவில் வேகமாகப் பிரபலமாகி வருவதாகவும், எதிர்காலத்தில் இன்னும் பல இலங்கை உற்பத்திப் பொருட்கள் சீனாவில் சந்தைப்படுத்தப்படும் வாய்ப்புகள் உள்ளதாக நம்புவதாகவும் சீன உதவி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் பெரிய அளவிலான திட்டங்களுக்கு மேலதிகமாகச் சிறிய மற்றும் நடுத்தரத் திட்டங்களிலும் முதலீடு செய்வதற்கான சீனாவின் விருப்பத்தையும் அவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

சீன வர்த்தக அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரைக் கொண்ட இந்தக் குழு, இலங்கை அதிகாரிகளுடன், அடுத்த மூன்று தொடக்கம் 5 ஆண்டுகளுக்கான கூட்டு பொருளாதார மற்றும் வர்த்தகத் திட்டங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ளது. (த)

## இணைந்து செயற்பட கூட்டணி தயார்தான்

### ஆனந்த சங்கரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26



சமாதானத்தையும் சமத்துவத்தையும் பெற்றுக் கொடுப்பதற்கு அனைவருடனும் இணைந்து செயற்படத் தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக உள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்ட ணிச் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசுடன் முரண்படுவதற்காக அன்றி ஏனைய இன மக்களையும் பாதிக்காத வகையில் அனைத்துத் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்காக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

'' எஸ். ஜே.வி. செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவதை எவரும் எதிர்ப்பதற்கு நியாயமான காரணம் எதுவும் இருக்க முடியாது.

மறைந்த தலைவர்கள், ஆரம்ப கால உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சமாதானத்தையும் அகிம்சையையும் பேணிக்காத்து தொடர்ந்து வரும் தலைமுறைகளுக்கு பரம்பரைச் சொத்தாக விட்டுச் சென்றுள்ளனர்'' என்றும் வீ. ஆனந்த சங்கரி தனது அறிக்கையில் கூறியுள்ளார். (உ-14)

## மாகாண தேர்தலுக்கு முன்னர் உதயனை ஒழிப்பதே நோக்கம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு சதிச்செயல். மக்களின் கருத்துகளுக்கும், ஊடக சுதந்திரத்திற்கும் எதிராக ஏவி விடப்பட்ட ஒரு செயல். அரசின் அனுசரணையுடனேயே இவை மேற்கொள்ளப்படுகின்றன.

தென் பகுதியில் அரசியல் கட்சியும் ஊடக அமைப்புகளும் மேற்கொண்டு வரும் எதிர்ப்பு நடவடிக்கையால் ஊடக சுதந்திரம் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கில் ஊடக சுதந்திரம் முற்றும் முழுதாக முடக்கப்பட்டுள்ளது'' என்றும் ரணில் தெரிவித்தார்.

தீக்கிரையாக்கப்பட்ட 'உதயன்' அச்சகத்தைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''இலங்கை அரசு ஊடகங்களைத் தம் பக்கம் சாய்க்க நினைக்கின்றது. செய்தி ஆசிரியர்களைத் தமது பக்கம் திருப்பப் பார்க்கிறது. அதை செய்யாதவர்களை இந்த அரசு தாக்குகின்றது'' என்றும் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்.

'' துரதிர்ஷ்டவசமாக இந்தத் தாக்குதலிலிருந்து தென் பகுதி ஊடகங்கள் தப்பிக் கொள்கின்றன. உதயனை எவ்வாறாயினும் தனது பக்கம் திருப்பவே அரசு முயற்சிக்கின்றது. இலங்கையில் ஜனநாயகத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்றே அரசு செயற்படுகின்றது '' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நீதித் துறையின் சுயாதீனத்தை இல்லாதொழித்தது போல், பத்திரிகைத் துறையின் சுயாதீனத்தையும் இல்லாதொழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஊடக அமைப்புக்கள் 'உதயன்' மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் தமது செயற்பாடுகளை நிறுத்திவிட்டமையை அவர் கண்டித்தார். ஊடகம் ஒன்றின் மீதான தாக்குதலின் பின்னரும் ஊடக ஆசிரியர்கள் ஜனாதிபதியுடன் விருந்துண்ணச் சென்றமையை அவர் விமர்சித்தார்.

''உண்மையில் ஊடக அமைப்புக்கள் என்ன செய்திருக்க வேண்டும்? ஜனாதிபதியுடனான சந்திப்பைப் புறக்கணித்திருக்க வேண்டும். அல்லது ஜனாதிபதியிடம் இதைப் பற்றிக் கேட்டிருக்க வேண்டும். இனியாவது அவர்கள் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்'' என்றார் ரணில்.

வடக்கில் தேர்தலுக்கு முன்னர் இரகசிய ஆயுதக் குழுக்கள் இல்லாமல் ஒழிக் கப்பட வேண்டும். வடக்குத் தேர்தலுக்கு முன் சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் ரணில் கூறினார்.

வடக்குத் தேர்தலில் பொது எதிரணிகளின் கூட்டு என்றே ஐ.தே.க.போட்டியிடும் என்று கூறிய அவர், தேர்தல் ஆரம்பம் முதல் முடிவடையும் வரை வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (உ-5)

## இராணுவமே தாக்கியது உதயன் பத்திரிகையை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. பகல் 12 மணியளவில் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்திற்கு வருகை தந்தார். தாக்குதலுக்கு உள்ளான அச்சு இயந்திரப்பகுதிக்குச் சென்று பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டார்.

'உதயன்' அச்சகப் பகுதிக்குள் நுழைந்த ரணில் விக்கிரமசிங்க, அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த ஊழியர்களைப் பார்த்து, '' தைரியமாகப் பயப்படாமல் வேலை செய்யுங்கள். நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம்'' என்று தைரியமூட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, டி.எம். சுவாமிநாதன் ஆகியோரும் வந்திருந்தனர்.

'உதயன்' மீது இந்த வருடம் நான்காவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

'' 2006 ஆம் ஆண்டிலிருந்து 'உதயன்' மீது தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'உதயன்' எங்களை (ஐ.தே.க) தாக்குகின்றது. 'உதயனை' அரசு தாக்குகின்றது. 'உதயன்' எங்களைத் தாக்குவதை விட, அரசு 'உதயனை' அதிகமாகத் தாக்குகிறது'' என்றார் ரணில் விக்கிரமசிங்க.

ரணிலின் குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய மறுத்தார். இராணுவத்தில் விசேட உடையணிந்த பிரிவு எதுவுமில்லை என்றார் அவர்.

'உதயன்' தாக்குதல் தொடர்பில் விசாரணை நடைபெறுவதால், ரணில் தனக்குக் கிடைத்த தகவலைப் பொலிஸாருக்கு வழங்கி விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (உ-2,5,4,13,14, ரி)

## கல்வி நிர்வாக சேவை நியமனத்தில் அரசியல்

### எதிர்த்து ஆசிரியர் சங்கம் வழக்கு

கொழும்பு,ஏப் 26

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் புறக்கணித்து விட்டுப் பரீட்சைக்குத் தோற்றாத ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள முடிவை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கான இந்த பரீட்சையில் 37 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பரீட்சை எழுதியதாகவும், அதில் 410 பேர் தேறியதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் புறக்கணித்து விட்டு, பரீட்சைக்குத் தோற்றாத அரசியல் செல்வாக்குப் பெற்ற 600க்கும் அதிகமானோருக்கு நியமனம் வழங்க அரசு தீர்மானித்துள்ளதாகவும் ஆசிரியர் சங்கம் தமது மனுவில் கூறியுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் 15 ஆம் திகதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. (த)

## வீஸா விண்ணப்ப முறையில் மாற்றம் செய்கிறது பிரிட்டன்

கொழும்பு,ஏப் 26

பிரிட்டனுக்கான வீஸா விண்ணப்ப முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 6 ஆம் திகதி முதல் இந்த மாற்றம் செய்யப்படவுள்ளதாகப் பிரிட்டன் தூதரகம் அறிவித்துள்ளது.

இது குறித்து தூதரக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரிட்டனுக்குச் செல்வோர் தங்களுடைய வீஸா விண்ணப்பங்களை எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் இணையத்தளத்திலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும். இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள புள்ளி அடிப்படையிலான இந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அதன் பிரதியை பிரிட்டன் வீஸா மத்திய நிலையம் ஒன்றில் கையளிக்க முடியும்.

இதற்கு https://apply.ukba.homeoffice.gov. uk/iapply.portal என்ற இணைய முகவரிக்குள் பிரவேசிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த)

## இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பணியாற்றிப் பின்னர் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவுக்கும் பௌத்த பீடாதிபதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போதே அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்க தேரர்கள் மேற்கண்டவாறு கோரியுள்ளனர். இலங்கையர்களின் பாதுகாப்பைத் தமிழ் நாட்டிலும் உறுதி செய்யுமாறு அவர்கள் இந்தியத் தூதுவரிடம் கோரியுள்ளனர். (த)

## இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் 11 பேர் அமெரிக்காவுக்கு

நியுயோர்க்,ஏப் 26

இலங்கையிலிருந்து புகலிடக் கோரிக்கையாளர்கள் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சென்றடைந்துள்ளனர்.

''இனிமேல் நாம் பயமின்றி அகதிகளாக இல்லாமல் வாழ முடியும்'' என்று அமெரிக்கா சென்றுள்ள இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளரான சிவபாலன் நிரஞ்சனி என்ற பெண் கூறினார். துபாயில் இருந்து கணவர் மற்றும் இரு பிள்ளைகளுடன் அவர் அமெரிக்கா சென்றடைந்துள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் தாமும் மேலும் 44 பேரும் ஆஸ்திரேலியாவுக்கு அடைக்கலம் தேடி இந்தியாவிலிருந்து புறப்பட்டதாக அவர் கூறினார்.

அப்பொழுது நிரஞ்சனி 7 மாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். 5 நாள்களின் பின் அவர்கள் பிரயாணம் செய்த படகு உடைந்து விட்டது. அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த சிங்கப்பூர் கப்பல் ஒன்றினால் தாம் காப்பாற்றப்பட்டதாக அவர் கூறினார். ஒக்ரோபர் 23ஆம் திகதி துபாயை இவர்கள் சென்றடைந்தனர். அங்கு இருந்தபோது நிரஞ்சனி பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். துபாயில் நிரஞ்சனியின் குழந்தை உட்பட 46 பேர் இருந்தனர். அவர்களில் 7 பேருக்குச் சர்வதேச பாதுகாப்பு அவசியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். ஒருவர் ஏற்கனவே அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டார். 11 பேர் இப்போது அமெரிக்காவை சென்றடைந்துள்ளனர். மேலும் 19 பேர் ஐக்கிய அரபு குடியரசில் தொடர்ந்து காத்திருக்கிறார்கள். (த-ப)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# குட்டக் குட்டக் குனிந்து வாழ்வுரிமைகளை இழப்பதா?

★வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் உள்ள காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பாக ஒட்டப்பட்ட அறிவித்தலில், காணி உரிமையாளர்கள் இனங்காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருப்பது முழுப்பொய். நாங்கள் இங்கே தான் இருக்கிறோம். எங்கேயும் செல்லவில்லை-

★நிலம் இல்லாமல் இருந்து [வாழ்ந்து] என்ன செய்யப் போகிறோம். செத்தாலும் [இறந்தாலும்] பரவாயில்லை. போராட்டம் நடத்தி ஒரு முடிவைக் காண வேண்டும்.-

★ஒரு நாளில் கூடிக் கலையும் போராட்டமாக இல்லாமல், தொடர்போராட்டம் நடத்த வேண்டும்.-

தங்களின் பூர்வீக நிலங்களை அரசாங்கம் அடாத்தாகச் சுவீகரிப்பதனைத் தடுத்தே ஆக வேண்டும் என்ற ஓர்மத்துடன் ஒலித்த மக்களின் குரல்களில் மேற்குறிப்பிட்ட உணர்வு பூர்வமான வாசகங்களும் அடங்கும்.

அரசாங்கத்தின் நில ஆக்கிரமிப்புக் குறித்து வலி.வடக்குப் பிரதேச சபையில் நடைபெற்ற கலந்துரையாடலில், போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்று முடிவு செய்த மக்களின் குரல்களே இவை.

வலி வடக்கில் மட்டுமன்றி, வலி கிழக்கிலும் மக்களின் நிலம் ஆக்கிரமிக்கப்படுவது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. வலி வடக்கு மிகவும் வளமுள்ள பிரதேசம். தமிழ் மக்களின் பொருளாதார வாழ்க்கையை உயர்வடையச் செய்யும் வாழ்வாதார வளங்களைக் கொண்டது.

மயிலிட்டி கடல் பரப்பு இலங்கையிலேயே முதல்தர கடல் வளமுள்ள பிரதேசம். அதேபோன்று விவசாயத்திலும் முந்திரிகை, வெற்றிலை போன்றவற்றின் உற்பத்திக்கும் பிரசித்தி வாய்ந்தது. தற்போது படையினர் அங்கு விவசாயம் செய்கிறார்கள். தங்கள் பூர்வீக மண்ணில்– சொந்த மண்ணில் வீடு கட்டி, விவசாயம் செய்து சிறப்புடன் வாழ்ந்தவர்கள், நடுத்தெருவில் நிற்கிறார்கள். இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க தமிழ் மக்களிடம் இப்போது அரசியல் பலமும் இல்லை; ஆயுதப்பலமும் இல்லை. மக்கள் பலம் ஒன்றுதான் எஞ்சியிருக்கிறது.

நேற்றுமுன்தினம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கட்சி பேதமின்றி அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். எதிர்வரும் திங்கட்கிழமை திகதி தொடக்கம் கூட்டமைப்பின் ஆதரவுடன் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

வலி வடக்கு, வலி கிழக்கில் மட்டுமல்ல, குடாநாட்டின் மற்றும் பகுதிகளிலும் வன்னியிலும் அரசின் நில ஆக்கிரமிப்புத் தொடர்கிறது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் ஐந்து குடும்பங்களுக்குச் சொந்தமான 700 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட உள்ளது. மண்டைதீவு, செம்மண்தோட்டப் பகுதியில் 600 ஏக்கர் காணி கடற்படையினர் வசம் உள்ளது.

முல்லைத்தீவில் கொக்கிளாய் மற்றும் அதனையடுத்த பகுதிகளில் தமிழர்களுக்கு உரித்தான காணிகளில் குடியேற்றப்பட்ட 3 ஆயிரம் சிங்களக் குடும்பங்களுக்கு காணி உரிமைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் பரவிப்பாஞ்சான், மருதநகர், இரணைத்தீவு பெரு நிலங்களில் மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. 1,800 குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் சம்பூரிலிருந்து வெளியேற்றப்பட்ட 6,000 மக்கள் கிளிவெட்டியிலும், மணல்சேனையிலும், மூதூரிலும் உறவினர்களுடன் வசித்து வருகின்றனர்.

ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்தபோது நிராயுதபாணிகளான தமிழர்களைப் பார்த்து ''போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' என்றார். டி.பி.விஜயதுங்க ஒரு சமயம் ''சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற மரத்தைச் சுற்றிப் படரும் கொடிகள்'' என்றார். தற்பொழுது பதவியில் உள்ள ஜனாதிபதி அவற்றை செயலில் காட்டுகிறார்; தான் நினைத்ததைச் செய்கிறார்.

வடக்கில் பொதுமக்களின் காணிகளை அபகரித்து அங்கு படையினரின் குடும்பங்களைக் குடியேற்றி வடக்கின் இனப் பரம்பலை மாற்ற மிகவும் தந்திரமாகத் திட்டம் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.அரசின் இந்த சூழ்ச்சி குறித்து, அடாத்தான செயல் குறித்து இப் பத்தியில் அவ்வப்போது சுட்டிக் காட்டியிருந்தோம்.

தமிழர் தேசத்தை அழிக்கும் அரசின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது தமிழ் மக்கள் சகலரினதும் வரலாற்றுக் கடமை.

குட்டக் குட்டக் குனியும் போக்கு தமிழ் மக்களிடமிருந்து பிரிக்க முடியாத உரிமைகளைப் பறிகொடுக்கவே வழிசெய்யும். கட்சி, மத, குல பேதமின்றி எல்லோரும் கைகோர்த்தால் பலம் பெருகும். இது தத்துவம் அல்ல; இது யதார்த்தமான உண்மை.



# ஈழத் தமிழர்களின் நில மீட்புக்கு ஐ.நா., இந்தியா உதவ வேண்டும்

## இராமதாஸ் கோருகிறார்

சென்னை, ஏப்.26

வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்கில் இராணுவத்தினர் தமது தேவைக்காக தமிழ் மக்களின் 6 ஆயிரத்து 381 ஏக்கரை கையகப்படுத்துகின்றனர்.

இந்தக் காணிகள் ஈழத் தமிழர்களுக்கு சொந்தமானவை. அவற்றை இராணுவத்திடமிருந்து மீட்டு தமிழ் மக்களிடம் மீள ஒப்படைக்கவும், தமிழர்கள் வாழும் பகுதிகள் இராணுவ மயமாக்கப்படுவதை தடுக்கவும் ஐ.நா.,. இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பா.ம.க.நிறுவுனர் மருத்துவர் இராமதாஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வலி.வடக்கு, வலி.கிழக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி இராணுவ பயன்பாட்டுக்காக சிங்கள அரசு கையகப்படுத்தியுள்ளது. இது கண்டிக்கத்தக்கது. 1990 ஆம் ஆண்டு மேற்படி பிரதேசங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததிலிருந்தே அவை கையகப்படுத்தப்பட்டுள்ளன.

போர் முடிவடைந்ததன் பின்னர் தமிழர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலங்கள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்த நிலங்களை இராணுவத்துக்கு சொந்தமாக்கும் உத்தரவை இலங்கை அரசு பிறப்பித்துள்ளது.

போரில் லட்சக் கணக்கான தமிழர்களை கொன்று குவித்த சிங்கள அரசு, இப்போது தமிழர்களின் கலாசார அடையாளங்களை அழித்தல், மற்றும் தமிழர்களின் சொந்த பூமியில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழர்களை சிறுபான்மையினராக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

ஐ.நா.விதிகளுக்கு இவை முரணானவை. ஆனாலும் சிங்கள அரசு தன்னை யாராலும் தட்டிக்கேட்க முடியாது என்ற நினைப்பில் செயற்படுகின்றது.

தமிழர்களின் வீடுகளைப் பறித்து அதில் இராணுவத்தை குடியமர்த்தி தமிழர்களை நடுத்தெருவில் விட்டுள்ளது. இவை சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரானதாகும்.

ஐ.நா.அமைப்பும், இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகமும் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு ஈழத் தமிழர்களுக்கு சொந்தமான நிலங்களை மீட்டு, அவர்களிடமே ஒப்படைக்கவும், தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவ மயமாக்கல் மேற்கொள்ளப்படுவதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ம-5)

# சுய விருப்பு வெறுப்பின் பேரில் ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## தேசிய இடமாற்றக் கொள்கையை கடைப்பிடிக்கவில்லை என்று விசனம்

அச்சுவேலி, ஏப்.26

வடக்கு மாகாணப் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றத்தில் தேசிய இடமாற்றக் கொள்கையை உரிய முறையில் கடைப்பிடிக்காமல் அதிகாரிகள் சுய விருப்பு வெறுப்புக்கு இடம்கொடுத்தும், அரசியல் தலையீட்டுடனும் நடைமுறைப்படுத்துவதால் மாணவர்களில் கல்விச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் ஆசிரியர்களும் உளரீதியாகப் பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கல்வி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகத்தினர் ஆகியோரின் கவனத்துக்கு தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கம் கொண்டு வந்திருக்கின்றது என்று தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் தலைவர் ஏ.சீ.எம். ஜவகர்ஷா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகம் அண்மைக் காலத்தில் பெரும் சீர்குலைவுக்கு உள்ளாகி உள்ளது. கல்வி நிர்வாகத்தில் ஏற்பட்ட குழப்பமான நிலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் எதிரொலிப்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

யாழ். கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தில் 55 வயது பூர்த்தியடைந்த ஆசிரியைக்கு இயல்பு நிலையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் என்ற வகைப்பாட்டில் இடமாற்றம் செய்யப்பட்ட சிலர் சில மாத காலத்தில் மீண்டும் அதே பாட சாலைக்கு மீள இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்திருந்தாலும் குறித்த தினத்தில் பாடசாலையை விட்டு வெளியேறி விட வேண்டும்.

இவை தேசிய இடமாற்றக் கொள்கைக்கு முரணானது மட்டுமல்ல அடிப்படை மனித உரிமைக்கும் மாறுபட்டது.

கல்வி அமைச்சு வெளியிட்ட தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான 2007- 12-13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையில்,

பிரிவு 3:4 இல் 55 வயது பூர்த்தியடைந்த ஆசிரியர்களுக்கு இயல்பு நிலையில் அவர்களின் சம்மதம் இன்றி இடமாற்றம் வழங்க முடியாது.

பிரிவு 3:4 (6) இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர் மேன்முறையீடு செய்யும் போது மேல்முறையீட்டுக்கான பதில் கிடைக்கும் வரை தொடர்ந்து அதே பாடசாலையில் கடமையாற்றலாம். மேன்முறையீட்டுக்கான பதில் ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்குள்ளே உரிய முறையில் ஆசிரியருக்கு கையளிக்கப்பட வேண்டும்.

இடமாற்றம் பெறும் ஆசிரியர் அதிகஷ்டப் பிரதேச மற்றும் கஷ்டப் பிரதேசப் பாடசாலையில் 3 வருடங்களுக்கு குறையாத காலம் கடமையாற்ற வேண்டும். வசதியில்லாத பாடசாலையாயின் 4 வருடங்களுக்குக் குறையாத காலம் கடமையாற்ற வேண்டும். வசதியான பாடசாலையாயின் ஆகக் கூடிய 8 வருடங்களுக்கு மேற் படாமலும் அதிவசதியான பாடசாலையாயின் 6 வருடங் களுக்கு மேற் படாமலும் கடமையாற்ற வேண்டும். இவ்வாறான விடயங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார் (ம-11)

# பல்கலை புகுமுக மாணவரின் வரவேற்பு நிகழ்வுகள் நிறுத்தம்

## இன்று நடைபெற ஏற்பாடாகி இருந்தன

வவுனியா,ஏப்.26

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை வரவேற்கும் சம்பிரதாய பூர்வ நிகழ்வுகளை உடன் நிறுத்துவதுடன் அந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர்கள் உட்பட எவரையும் கலந்து கொள்ள வேண்டாம் என்றும் பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி தேசத்தின் அபிவிருத்தி என்ற தலைப்பில் 2012 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை வரவேற்கும் சம்பிரதாய பூர்வ நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் உள்ள தேர்தல் தொகுதிகள் ரீதியாக நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

அந்த நிகழ்வுகளையே உடன் நிறுத்துமாறும், அந்த நிகழ்வுகளில் அரச அதிகாரிகள் எவரும் கலந்து கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து பல்கலைக்கழங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட சுமார் 625 மாணவர்களுக்கான வரவேற்கும் நிகழ்வு நாளை வவுனியாவில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையை அடுத்து அந்த நிகழ்வும் இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-400)

# வரணி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

தென்மராட்சி,ஏப்.26

வரணிப் பிரதேச மக்களின் நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேற்றப்படவுள்ளது.

தென்மராட்சி வடக்குப் பிரதேசமான வரணிப் பகுதியில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேச மக்களுக்கென வரணிப் பிரதேச வைத்தியசாலை இயங்குகிறது.

இந்த வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வழங்குமாறு பிரதேச மக்கள் சுகாதார பகுதியினரிடம் நீண்ட நாள்களாக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கோரிக்கைக்கு மதிப்பளித்த சுகாதாரத் திணைக்களத்தினர் இன்று அம்புலன்ஸை வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# 142



டாக்கா, ஏப்.26
பங்களாதேஷ் கட்டட விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 142 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுடன் மருத்துவனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் பங்களாஷே தலைநகர் டாக்காவில் 8 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்தது. அந்தக் கட்டடத்தில் உள்ள ஆடை ஏற்றுமதி நிறுவனத்தில் ஏராளமானவர்கள் பணிபுரிந்தனர் என்று கூறப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று மீட்புப் பணியாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ர)

## பெனாசீர் கொலை வழக்கு: முஷாரப்புக்கு பிணை மறுப்பு

ராவல்பிண்டி, ஏப்.26
பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி பர்வேஸ் முஷாரப்புக்கு பிணை வழங்க முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
4 ஆண்களின் பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பாகிஸ்தான் திரும்பியிருந்தார் முஷாரப். எனினும் அவர் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த 4 தொகுதிகளிலும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.
இந்தநிலையில் முஷாரப் ஆட்சியில் இருந்தகாலத்தில் 50 நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்து தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டமை தொடர்பில் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தற்போது பேனாசீர் பூட்டோ கொலை தொடர்பாக நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் பிணை வழங்கக் கோரி முஷாரப் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் முஷாரப்புக்கு பிணை வழங்கும் முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ர)



# இந்தியாவுக்கு நிபந்தனை

பீஜிங், ஏப்.26
இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ள தமது இராணுவத்தை திரும்ப அழைக்க வேண்டுமெனில், எல்லைப் பகுதியில் இந்தியா புதிதாக அமைத்துள்ள இராணு அரண்களை அகற்ற வேண்டும் என்று சீனா நிபந்தனை விதித்துள்ளது. அதையடுத்து எல்லைப் பகுதியில் இந்தியா தனது இராணுவத்தை குவித்து வருகின்றது என்று கூறப்படுகிறது.




காஷ்மீரின் லடாக் பகுதியில் கடந்தவாரம் சீன இராணுவம் இந்திய எல்லைக்குள் 10 கிலோ மீற்றர் தூரம் ஊடுருவி காவலரண்களை அமைத்திருந்தது. இந்திய இராணுவ அதிகாரிகள் அதுகுறித்து சீனாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். எனினும் தமது படைகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ளன என்பதை சீனா மறுத்துவருகின்றது. அந்தப் பகுதியில் தமது படைகள் வழமையான ரோந்துப் பணிகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறுகின்றது. அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள தமது படைகளை திருப்பப் பெற வேண்டுமானால் இந்திய - சீன எல்லைக் பகுதியில் இந்தியா புதிதாக அமைத்துள்ள காவலரண்களை அகற்ற வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது சீனா. அதையடுத்து இந்திய இராணுவத்தினர் அந்தப் பகுதிகளில் அதிகளவு குவிக்கப்பட்டு வருகின்றனர். (ர)

## சிரியாவில் மதகுருக்கள் கடத்தல்

டமஸ்கஸ், ஏப்.26
சிரியாவின் வட பிராந்தியத்தில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இரண்டு கிறிஸ்தவ மதகுருக்கள் கடத்தப்பட்டுள்ளனர். சிரிய துருக்கி எல்லைப் பகுதியில் வைத்து இவர்கள் இருவரும் கடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. சிரிய அரசால் இந்தக் கடத்தல் குறித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் யார் கடத்தியுள்ளார்கள் என்பது தொடர்பில் இதுவரை உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. கடத்தப்பட்ட கிறிஸ்தவ மதகுருக்கள் சிரியாவில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வந்திருந்ததாக கூறப்படுகின்றது. (ர)

## சீனாவில் இருந்து தைவானுக்கு பறந்தது பறவைக் காய்ச்சல்

தைபே, ஏப்.26
சீனாவைத் தாக்கியுள்ள பறவைக் காய்ச்சல் தற்போது தைவானையும் தாக்கியுள்ளது. தைவானைச் சேர்ந்த 53 வயது ஆண் ஒருவர் பறவைக் காய்ச்சல் வைரஸ் தொற்றுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
அதையடுத்து பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது தைவான் அரசு. தைவானுக்குள் உள்நுழையும் விமான மற்றும் கப்பல் பயணிகள் கடும் மருத்துவ சோதனைகளின் பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர் என்று தைவான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ர)



“ சீனாவில் பரவிவரும் ஒருவகைக் காய்ச்சல், பறவைகளிடமிருந்து இலகுவில் மனிதர்களுக்கு தொற்றக்கூடியது என சர்வதேச சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. எனினும், இதனை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

## பொறுக்க முடியாது

இஸ்லாமாபாத், ஏப்.26
''பாகிஸ்தான் முன்னாள் இராணுவத் தளபதி பர்வேஷ் முஷாரப்புக்கு எதிரான தொடர்ச்சியான அவமதிப்புகளை பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது'' என்று அந்த நாட்டின் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:
''முஷாரப்பை அவமானப் படுத்தவும், இராணுவத்தை நீதிமன்றத்துக்கு இழுக்கவும் சிலர் நினைத்தால் நாங்கள் சரியான பதிலடி தருவோம். அப்போது நிலைமை இன்னும் அபாயகரமாகவும், விபரீதமாகவும் மாறி விடும் என எச்சரிக்க விரும்புகிறோம். முஷாரப்புக்கு எதிராக சிலர் வன்முறையைத் தூண்டி விட்டு அரசியல் ஆதாயம் பெற முயன்று வருகின்றனர்.



ஒரு கட்டத்திற்கு மேல் அவரை அவமானப்படுத்துவதை மூத்த இராணுவ அதிகாரிகளான எங்களால் சகித்துக் கொள்ள முடியாது.'' என்று தெரிவித்துள்ளனர்.
முஷாரப்பின் ஆட்சி காலத்தில் பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளில் பலர் தற்போது இராணுவத்தின் உயர் பொறுப்புகளில் உள்ளதால் முஷாரப் அவமானப்படுத்தப்படுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.
முஷாரப் மீது விசுவாசம் கொண்ட சிலர் அவரை வீட்டுக் காவலில் இருந்து காப்பாற்றவும் முயற்சிக்கக்கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.(ர)

## அமெரிக்க நிபந்தனையை நிராகரித்தது வடகொரியா




பியாங்யாங், ஏப்.26
அமெரிக்காவினால் பேச்சுக்கள் தொடர்பில் விடுக்கப்பட்ட நிபந்தனைகளை வடகொரியா நிராகரித்துள்ளது. சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னர், தமது அணு ஆயுதத் திட்டத்தை ஒரு போதும் கைவிடமுடியாது என வடகொரியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.
வட கொரியாவில் ஏவுகணைகள் மற்றும் அணுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டதை அடுத்து கொரிய தீபகற்பத்தில் பெரும் பதற்றங்கள் அதிகரித்தன.
இந்த நிலையில் அமெரிக்காவும் தென் கொரியாவும் நிபந்தனைகளுடன் வட கொரியாவுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தன.
எனினும் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய தேவை தமக்கு இல்லை என்று வடகொரியா அறிவித்துள்ளது.(ர)

# ஒபாமாவுக்கு காயம்

நியூயோர்க், ஏப்.26
வெள்ளை மாளிகையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வெளியான டுவிட்டர் செய்தியினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
அசோசியேட்டட் பிரஸ் ஊடகத்தின் டுவிட்டர் தளத்திலேயே இந்தச் செய்தி வெளியாகியிருந்தது. அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் உலகளாவிய அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
இந்தத் தகவல் வெளியானதும் அமெரிக்க பங்குச் சந்தையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.
எனினும் தகவல் வெளியான சிறிது நேரத்திலே இந்தச் செய்தியை மறுத்த அசோசியேட்டட் பிரஸ் ஊடகம், ''இணையத்தள ஹக்கர்ஸ் தமது தளத்தை முடக்கி அந்தச் செய்தியைப் பதிவு செய்துள்ளனர். அந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானது. அதுகுறித்து பாதுகாப்புத் துறையிடம் முறைப்பாடு செய்துள்ளோம். அதுகுறித்து அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்,'' என்று தெரிவித்துள்ளது. (ர)





பனாகொட இராணுவத்தளத்தில் நடைபெற்ற பீரங்கிப் படை வீரர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் புராதன பீரங்கிகளின் ஓவியம் ஒன்றை பார்வையிடும் ஜனாதிபதி. (16)

# 2013 ஆம் ஆண்டில் கொலைகள் குறைவு

கொழும்பு,ஏப்.26
2012ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் மனிதப் படுகொலைச் சம்பவங்கள் 2013ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
2012 01 01 தொடக்கம் 2012 04 19 வரையான காலப்பகுதியில் மனிதப் படுகொலைச் சம்பவங்கள் 219 பதிவானதாகவும் அதில் 265 பேர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
எனினும் இந்த ஆண்டு 2013 01 01 தொடக்கம் 2013 04 19 வரை 185 மனிதப் படுகொலைச் சம்பவங்கள் பதிவானதாகவும் அதில் 197 பேர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
அதன்படி 2012ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களை விட 2013ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 34 மனிதக் கொலைச் சம்பவங்களும் 68 மரணங்களும் குறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# மின்கட்டண உயர்வை ஆராய அமைச்சரவை

கொழும்பு,ஏப்.26
மின் கட்டண அதிகரிப்பு நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அவசர அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை கூட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போதைய நெருக்கடி நிலைமைகளைச் சமாளிப்பது குறித்து தீவிர ஆலோசனைகளை நடத்தியிருக்கிறார்.
நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஜனாதிபதி மின்கட்டண அதிகரிப்பு நாடு முழுவதும் பெரிதும் அதிருப்தி நிலைமையை உருவாக்கியுள்ளதால் மக்களைப் பாதிக்காத வகையில் நிவாரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து அமைச்சர்களுடன் விரிவாக ஆராய்ந்திருக்கிறாரென அறியமுடிந்தது.
மின்கட்டண அதிகரிப்பின் விளைவாக நாட்டில் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலைமை உருவாகியுள்ளதால் இந்த விடயத்தில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்தி மக்களுக்கு ஏதுவான தீர்மானங்களை எடுக்கவேண்டுமென சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியிடம் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

**மீள்பரிசீலனை செய்து மக்களுக்கு எந்த வகையில் நிவாரணம் வழங்கலாம் என்பது பற்றியே**

மின்கட்டண அதிகரிப்பு விடயத்தில் மீள்பரிசீலனை செய்து மக்களுக்கு எந்த வகையில் நிவாரணம் வழங்கலாம் என்பதுபற்றியே அமைச்சரவை நீண்டநேரம் ஆராய்ந்ததாக மூத்த அமைச்சர் ஒருவர் உதயனிடம் தெரிவித்தார்.

# மின்கட்டண விவகாரத்தால் ஆளும்–எதிரணிகள் மோதல்

## நாடாளுமன்றத்தினுள் அமளி; தண்ணீர்ப் போத்தல்களும் வீச்சு

கொழும்பு,ஏப்.26
மின் கட்டண உயர்வுக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டு எதிர்க்கட்சிகள் சபையில் நேற்று நடத்திய மெழுகு வர்த்திப் போராட்டத்தின்மீது ஆளுந் தரப்பு உறுப்பினர்கள் தண்ணீர் போத்தல் வீசி நேரடித் தாக்குதல் நடத்தியதால் சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அத்துடன், இருதரப்பும் சபைக்கு நடுவில் இறங்கி கடும் தர்க்கத்தில் ஈடுபட்டதால் நேற்றுமுன்தினம் மாலை மோதல் களமாகக் காட்சியளித்தது நாடாளுமன்றம்.
இரு தரப்பினரும் முஷ்டியை முறுக்கிக்கொண்டு மோதலில் ஈடுபட முனைந்தாலும், சிரேஷ்ட உறுப்பினர்கள் அவர்களை கடும்சிரமத்திற்கு மத்தியில் கட்டுப்படுத்தினர். இருப்பினும் இடையே கடும் தர்க்கம் ஏற்பட்டது.
அரச தரப்பு உறுப்பினர், லொஹான் ரத்வத்த, ஐ.தே.க. உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோரே ஆரம்பத்தில் மோதிக்கொள்ள முற்பட்டனர். இதன் பின்னர் மனுச நாணயக்கார, அஜித் பி.பெரேரா மீது பாய்ந்து தாக்க முற்பட்டார். இவ்வாறு சர்ச்சை நீடித்துக்கொண்டே சென்றது.
இதற்கிடையில் கடும் அமளி துமளிக்கு மத்தியிலும், நான்கு சட்டமூலங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசு எடுத்த நடவடிக்கைக்கு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசையின் மேல் ஏறிநின்றவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். மெழுகுவர்த்திப் போராட்டத்தில் ஜே.வி.பி. கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
இருப்பினும், திருத்தங்களுடன் குறித்த சட்டமூலத்தை அரசு நிறைவேற்றிக்கொண்டது.
அதேவேளை, மெழுகுவர்த்திப் போராட்டத்தின்போது ஐ.தே.க உறுப்பினர்கள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை நோக்கி படையெடுத்துச் சென்று அவரை மெழுகுவர்த்தியை ஏந்துமாறு கோரினாலும், அமைச்சர் சிரித்தவாறு அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோதிலும், கட்சியின் தலைவர் சம்பந்தன், தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு நடந்தவற்றை அவதானித்துக் கொண்டிருந்தார்.
மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், பிரஜைகள் முன்னணியின் தலைவர் ஜே.ஸ்ரீரங்கா ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

# ஆஸி.சென்ற 55 பேர் கைது



யாழ்ப்பாணம், ஏப்.26
படகில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 6 பெண்கள், 8 குழந்தைகள் உட்பட 55 பேரை நீர்கொழும்பு கடற்பரப்பில் வைத்து தாம் கைது செய்துள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.
கைதானவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தாம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது 'மிதுன புதா 3' என்ற மீன்பிடிப் படகில் இவர்கள் சென்று கொண்டிருந்தவேளை இவர்களைக் கைதுசெய்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
கைதானவர்களில் 47 தமிழர்கள், 5 முஸ்லிம்கள், 3 சிங்களவர்கள் அடங்குகின்றனர்.
கைது செய்யப்பட்ட அனைவரும் முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஜ-16)

# ஜெய்லானி பள்ளியை உடைத்தால் நாற்பது நாள்களில் ஆட்சி கவிழும்

## கோத்தாவுக்கு அஸாத் சாலி சவால்

கொழும்பு,ஏப்.26
ஜெய்லானி முஸ்லிம் பள்ளிவாசலைத் தரைமட்டமாக்கி மீண்டுமொரு இனக்கலவரத்தைத் தூண்ட அரசுடன் சேர்ந்திருக்கும் சில தீய சக்திகள் திட்டமிட்டுள்ளன. ஆனால், அந்தப் பள்ளிவாசலைத் தாக்கி முஸ்லிம் சமூகத்திற்கு மீண்டும் அநீதி இழைக்கப்படுமாயின், அடுத்து வரும் நாற்பதே நாட்களில் இந்த அரசு வீட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கும். இது கோத்தாபய ராஜபக்ஷவுக்கு நான் விடும் சவால்.''
- இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அஸாத் ஸாலி தெரிவித்தார்.
'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' அமைப்பு கொழும்பு, பான்ஸ் பிளேஸில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
நாடு தற்போது பாரிய பிரச்சினைக்கு மத்தியில் பயணித்துக் கொண்டிருக்கிறது. மின்கட்டண உயர்வும் இந்த நாட்டு மக்களை மேலும் அதலபாதாளத்துக்குள் தள்ளும் ஒரு செயலாகிவிட்டது. இந்த மின் கட்டண உயர்வால் சாதாரண அரச ஊழியர் ஒருவர் மாதமொன்றுக்கு மேலதிகமாக 1,300 ரூபாவை சம்பாதிக்கவேண்டியுள்ளது. இந்த விலை அதிகரிப்பால் குறைந்த அளவில் மின்சாரத்தைப் பாவிக்கும் மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.


**ஜெய்லானி முஸ்லிம் பள்ளிவாசலைத்தாக்கி மீண்டும் ஓர் இனக்கலவரத்தை உண்டுபண்ண அரசுடன் சேர்ந்துள்ள சில தீயசக்திகள் முயற்சித்து வருகின்றன.**



அதுமட்டுமல்லாது, நாட்டில் தற்போது முஸ்லிம் மக்கள் சற்று அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்துகொண்டு வரும் இவ்வேளையில், ஜெய்லானி முஸ்லிம் பள்ளிவாசலைத்தாக்கி மீண்டும் ஓர் இனக்கலவரத்தை உண்டுபண்ண அரசுடன் சேர்ந்துள்ள சில தீயசக்திகள் முயற்சித்து வருகின்றன.
நாட்டிலுள்ள அனைத்து இனமக்களுக்கும் துரோகமிழைக்கும் இந்த அரசின் அடாவடித்தனம் தொடர்ந்தால் குறுகிய காலத்துக்குள்ளே இதன் ஆட்சி கவிழ்ந்துவிடும். இது கோட்டாபயவுக்கு நான் விடும் சவால் - எனத் தெரிவித்தார்.

# இந்தியாவின் கடற்பலத்தால் அச்சமடைகிறது சீன அரசு

புதுடில்லி,ஏப் 26
இலங்கை, செசெல்ஸ் போன்ற நாடுகளில் நிலைகளை அமைக்க வேண்டும் என்ற இந்து சமுத்திரம் தொடர்பான இந்தியாவின் கொள்கை குறித்து சீனா கவலை கொண்டுள்ளதாக ஆயுதக் கட்டுப்பாடுகள் தொடர்பான அமெரிக்க நிபுணர் கலாநிதி லோறா சால்மன் தெரிவித்துள்ளார்.
சீனாவின் ஆயுதக்கட்டுப்பாட்டுக் கொள்கை, இந்திய - சீன மற்றும் சீன- ரஸ்ய மூலோபாய உறவுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்ட கலாநிதி லோறா சால்மன், அது தொடர்பான விபரங்களை இந்திய ஊடகம் ஒன்றில் வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பாக ஹைதராபாத்தில் ஊடகவியலாளர்களுடன் பேசிய கலாநிதி லோறா சால்மன்,
சீனாவில் உள்ள சில நிபுணர்கள், கடற்படைப் பலத்தில் சீனாவுக்குச் சமமாக இந்தியா இருக்கிறது அல்லது அதனை முறியடிக்கக் கூடிய நிலையில் உள்ளது என்று உணர்கிறார்கள். அண்மைக்காலத்தில் இந்தியக்கடற்படை வலுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை இந்து சமுத்திரத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கைக்கு இந்தியா பயன்படுத்தலாம் என்று சீனா உணர்கிறது. இது தான் அவர்களின் முதலாவது சிந்தனையாக உள்ளது.



சீனாவின் எரிபொருள் நிரப்பும் நிலைகள் பொருளாதார நலன்களுக்கு அப்பால் இராணுவ நோக்கங்களுக்கும் பயன் படுத்தப்படக் கூடும். பாதுகாப்பு நவீன மயப்படுத்தல் திட்டத்தை செயற்படுத்தும் இந்தியா மீதான சீனாவின் கவனம் அதிகரித்துள்ளது.
இந்திய - அமெரிக்க கூட்டை, பிராந்தியத்தில் சீனாவை முறியடிக்கும் மூலோபாயம் என்ற கோணத்திலேயே சீனா நோக்குகிறது. ஜப்பான், தாய்வான் நாடுகளை உள்ளடக்கிய அமெரிக்க கூட்டணியில் இந்தியாவும் பங்கேற்கக் கூடும் என்று கூறினார்.
(த)

## கூட்டுறவு நல்லாட்சி தொடர்பான வேலைத் திட்டம் வடக்கில்

யாழ்ப்பாணம்,ஏப்.26
இலங்கை தேசிய கூட்டுறவு சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கூட்டுறவு நல்லாட்சி தொடர்பான வேலைத் திட்டம் வடக்கில் அறி முகம் செய்து வைக்கப்படவுள்ளது.
சுவீடன் கூட்டுறவு மத்திய நிலையத்தினரால் வழி நடத்தப்படும் இந்த வேலைத் திட்டம் நாட்டில் உள்ள சகல கூட்டுறவுச் சபைகளுக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
இந்த வேலைத் திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள கூட்டுறவு சபைகளுக்கும் விஸ்தரிக்கப் படவுள்ளது.
வடமாகாணத்துக்கான வேலைத் திட்டம் தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.
இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் தேசமானிய பன்துரணவக கலந்துகொள்ளவுள் ளார்.
இந்த வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வுக்கு வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சபைகளின் தலைவர், செயலாளர், பணிப்பாளர்கள், மகளிர் குழு தலைவிகள் மற்றும் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ம-17)

# யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் பிரிவுபசாரத்தின் போது கார் அன்பளிப்பு

### அதற்கான நிதியை மாணவர்களிடம் வசூலிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.26
யாழ். தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதியின் பிரிவுபசார விழாவில் அவரைக் கௌரவித்து சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான கார் ஒன்றை அன்பளிப்பாக வழங்க கல்லூரி நிர்வாகம் தீர்மானித்துள்ளது.
அதற்கான நிதியை மாணவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முயற்சிப்பதாகவும் கல்வியற் கல்லூரில் உள்ள மாணவர் ஒருவரின் பெற்றோர் தெரிவித்தார்.
ஒரு மாணவரிடம் குறைந்தது ஆயிரம் ரூபா தொடக்கம் 2 ஆயிரம் ரூபாவரை நிதி வழங்க வற்புறுத்துவதாகவும் பழைய மாணவர்களிடம் இருந்து இதற்கென 5 ஆயிரம் ரூபாவரை வசூலிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றனது.
இது தொடர்பாக மாணவர்களின் பெற்றோர்களிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டதாகவும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் பெற்றோருடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றதாகவும் பெற்றோர் ஒருவர் குறிப்பிட்டார்.
கூட்டம் பிரபல வைத்தியர் ஒருவரின் தலைமையில் நடைபெற்றதாகவும் சொல்லப்படுகின்றது. (ம-7)

## மானிப்பாய் கோவில்பற்று கடை[illegible] ஞாயிறன்று மூடுவதற்குத் தீர்மா[illegible]

வலி.தென்மேற்கு,ஏப்.26
மானிப்பாய் கோவில்பற்று பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படவுள்ளன.
இதற்கான தீர்மானம் மானிப்பாய் கோவில் பற்று வர்த்தகர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.
மானிப்பாய், ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய், நவாலி ஆகிய ஐந்து கிராமங்களை உள்ளடக்கும் மானிப்பாய் கோவில்பற்று வர்த்தக சங்கத்தில் சுமார் இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் அங்கத்தவர்களாக இணைந்துள்ளார்கள்.
இந்தப் பகுதியிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருப்பதனால் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்கு[illegible] மன உளைச்சலுக்கும் [illegible]ளாகிறார்கள்.
பாதிக்கப்படும் ஊழியர்களின் நலன் கருதியும் யாழ். வணிகர் கழகத்தின் ஆலோசனைக்கமையவும் வர்த்தக நிலையங்கள் அனைத்[illegible]யும் ஞாயிற்றுக்கிழமை[illegible] மூடவேண்டிய நிலை[illegible] வர்த்தகர் சங்கத்துக்கு ஏற்[illegible]ளது.
வர்த்தகர் சங்கத் தலை[illegible] எஸ். ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு ஒரு சில வர்த்தகர்[illegible] தவிர ஏனைய வர்த்தகர்கள் ஆதரவு தெரிவித்[illegible]கள்.
இதையடுத்துப் பிரதி [illegible]றுக்கிழமைதோறும் [illegible] நிலையங்களை மூடு[illegible] வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது. ([illegible])

## கள் இறக்க பிளாஸ்டிக் போத்தல் பயன்படுத்துவதற்கு தடை விதி[illegible]

தென்மராட்சி,ஏப்.26
சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் பிளாஸ்ரிக் போத்தலில் கள் இறக்குவதற்குத் தடை விதித்துள்ளனர்.
பிளாஸ்ரிக் போத்தல்களில் கள் எடுப்பதால் பாவனையாளர்கள் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாவதாக உதயனில் சுட்டிக்காட்டப்பட்டது.
இதை அடுத்து சாவகச்சேரி சங்கத்தினர் [illegible] தவிர்ந்த ஏனைய [illegible] போத்தல்களை [illegible] கட்டி கள் எடுப்பதை [illegible]குமாறும் இதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.
சாவகச்சேரி சங்கத்தின் முன்மாதிரியான நட[illegible]கைக்கு வரவேற்புக் கி[illegible]துள்ளது. ([illegible])

## நெஞ்சு வலியால் சாவு

யாழ்ப்பாணம்,ஏப்.26
சகோதரியின் பூப்பு நீராட்டு விழாவுக்கென கொழும்பிலிருந்து வருகை தந்த அண்ணன் நெஞ்சு வலியால் பரிதாபகரமாக சாவடைந்த சம்பவம் ஒன்று திங்கட்கிழமை ஏழாலை வடக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த திருச்செல்வம் வசீகரன் (வயது-25) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக சாவடைந்துள்ளார்.
சகோதரியின் பூப்பு நீராட்டு விழாவுக்கென கொழும்பிலிருந்து வருகை தந்து நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த போது திடீரென நள்ளிரவு 12 மணியளவில் நெஞ்சுவலி ஏற்பட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
மல்லாகம் நீதிமன்ற உத்தரவுப்படி சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உடல் கூற்றுப் பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. (ம-14-36)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் யூனியர் வேம்பர் ஒவ் இலங்கையும் இணைந்து நெடுந்தீவில் செஞ்சிலுவைச் சங்க பணிமனையில் நடத்திய இலவச மருத்துவ முகாமின்போது நோயாளி ஒருவருக்கு இரத்த அமுக்கப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்த இலவச மருத்துவ முகாமில் 300 இற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டன. (ம-5)

## மாகாணங்களிடையே கூ. கல்வி[illegible] அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்[illegible]

யாழ்ப்பாணம்,ஏப்.26
மாகாணங்களுக்கு இடையே கூட்டுறவுக் கல்வியை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை தீர்மானித்துள்ளது.
இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் பிராந்திய கல்வி அபி விருத்தி நிலையங்களின் கீழ் மாவட்டக் கூட்டுறவுச் சபைகளை ஒன்றிணைத்து மாகாண மட்டத்திலான கூட்டுறவு பயிற்சி கல்வித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் கூட்டுறவு கல்வி அபிவிருத்தி செய்யப் படவுள்ளது.
இதன் முதற்கட்டமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண[illegible]களுக்கான கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி சம்பந்த[illegible] செயலமர்வு ஒன்றை அநு[illegible]புரத்தில் நடத்து[illegible] இலங்கை தேசிய கூ[illegible] சபை நடவடிக்கை[illegible] கொண்டுள்ளது.
எதிர்வரும் 27 ஆம், [illegible] ஆம் திகதிகளில் இந்தச் செய[illegible]மர்வு இடம்பெறவுள்ளது. இந்தச் செயலமர்வுக்கு வ[illegible] கிழக்கு மாகாண கூட்டுறவுச் சபையின் தலைவர்கள் மற்றும் மாவட்ட செய[illegible]கள், கூட்டுறவு [illegible] உத்தியோகத்தர்கள் [illegible]றோர் அழைக்கப்[illegible]னர். ([illegible])

## மலேரியா தினத்தை முன்னிட்டு நடமாடும் விழிப்புணர்வு

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் மட்டுவில் பிரதேசத்தில் மூன்று வாரங்களுக்கு மலேரியா ஒழிப்பு நடமாடும் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள வுள்ளனர்.
நேற்று முன்தினம் இந்தச் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. மே 15 ஆம் திகதிவரை இது இடம்பெறவுள்ளது.
இந்தக் காலப் பகுதியில் வீடு வீடாகச் சென்று இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதுடன் அந்தப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக் கட்டடங்களில் மலேரியா விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
எதிர்வரும் மே 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மலேரியா ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-9)

## திருவிழாக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.26
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான ஆலய அறங்காவல் சபையின் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அறங்காவலர் சபைத் தலைவர் க.பரமலிங்கம் தலைமையில் ஆலய அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## மணிவிழா

தென்மராட்சி,ஏப்.26
அரச சேவையில் 35 வருடங்கள் பணியாற்றி ஓய்வுபெறும் சாவகச்சேரி நகரசபை செயலாளர் சுப்பிரமணியம் புத்திசிகாமணிக்கு சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி மக்கள் இணைந்து மணிவிழாவை நடத்தவுள்ளனர்.
இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் விழாவில் பல பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-9)

## திண்மக் கழிவு சேகரிக்கும் நிலையம் அரியாலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.26
நல்லூர் பிரதேச சபை அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் திண்ம கழிவு சேகரிக்கும் நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.
இந்தப் பிரதேசத்தில் உள்ள இந்து மயான வளாகத்தில் இந்தத் திண்மக் கழிவகற்றும் சேமிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.
தற்போது இந்த மயான சுற்றாடலில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களை சேகரித்து இந்தத் திண்மக் கழிவு நிலையங்கள் ஊடாக சுத்திகரித்து அதை பசளையாக்கும் திட்டம் ஒன்றை பிரதேச சபை நடைமுறைப்படுத்தவுள்ளது.
மயான சுற்றாடலில் தொடர்ந்து கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அதன் தூய்மை பாதிக்கப்படுகின்றது.
இதனை அடுத்தே மயானத்தில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களை சேகரித்து திண்மக் கழிவு சுத்திகரிப்பு கழிவு நிலையம் ஊடாக பசளையாக்கும் திட்டம் ஒன்றை சபை நடைமுறைப்படுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)



## புதுக்குடியிருப்பில் நடமாடும் காணிக் கச்சேரி

புதுக்குடியிருப்பு,ஏப். 26

புதுக்குடியருப்பு பிரதேச செயலர் பிரிவில் காணி ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை ஒன்று இடம் பெற வுள்ளது.

இறுதிப் போரின் போது காணிதொடர்பான ஆவணங்களை தவறவிட்டவர்கள், இந்தச் சேவை ஊடாக தமது ஆவணங்களை மீளப் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாணக் காணி ஆணையாளரின் பணிப்பின் பேரில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 19 கிராமசேவகர் பிரிவுகளிலும் இந்த நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக புதுக்குடியிருப்பு மேற்கு. தேவிபுரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் எதிர்வரும் 29 ஆம் திகதி இந்த நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது.

இந்த் நடமாடும் சேவையின் போது வீடு வீடாகச் சென்று மக்களிடம் விவரங்கள் திரட்டப்பட்டு அதன் அடிப் படையில் காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்படவுள்ளதுடன், காணி அனுமதிப்பத்திரங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும்-

தொடர்ந்து ஏனைய பகுதிகளிலும் இந்தச் சேவை நடத்தப்படவுள்ளது என்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகக் காணி நிர்வாக அலுவலர் தெரிவித்துள்ளார். (ஐ-400)

## நெல்லை சந்தைப்படுத்த விவசாயிகள் சிரமம்

அக்கராயன்,ஏப்.26

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் தொடர்ந்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெரும்போக அறுவடை காலத்தில் பெய்த பெரும் மழை காரணமாக நெற் செய்கைகள் யாவும் அழிவடைந்தன. எஞ்சியவற்றை நெல்லாக்குவதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. தற்போது அவற்றைச் சந்தைப்படுத்துவதிலும் இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

## இரத்ததானம்




கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டிலான இரத்ததான நிகழ்வு ஒன்று கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் இராணுவத்தினர், பொலிஸார், பொதுமக்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க நிர்வாகத்தினர் என 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். (ஐ 6 405)

## வன்னேரி– ஜெயபுரம் புராதன பாதை 'ஒரு கிராமம் ஒரு வேலை' திட்டத்தில் புனரமைப்பு

அக்கராயன், ஏப்.26

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைபெறும் 'ஒரு கிராமத்தில் ஒரு வேலை' திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 375 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்போது வன்னேரிக்குளத்தில் இருந்து ஜெயபுரம் செல்லும் பிரதான வீதி புனரமைக்கப்படவுள்ளதாக அரச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி வன்னேரிக்குளத்தில் இருந்து ஜெயபுரம் வரை முன்னைய காலத்தில் பயன்படுபடுத்தப்பட்ட வரைபட ஒழுங்கிலான வீதி மீளமைக்கப்படவுள்ளது.

குறிப்பாக வன்னேரிக்குளம், சோலை, மண்ணியாகுளம் ஊடாக ஜெயபுரம் வரை இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளது. வன்னேரிக்குளத்தின் கீழான பாதையில் மழைக்காலங்களில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவது மற்றும் சோலை, மண்ணியாகுளம் கிராமங்களில் அபிவிருத்தி என்பவற்றைக் கருத்தில் கொண்டு மேற்படி பாரம்பரிய வீதியை புனரமைத்து தரும்படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, வீதியைப் புனரமைக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

# பூநகரியில் 5 ஆயிரம் ஏக்கர் காணியை தமக்கு வழங்க படையினர் கோரிக்கை

## தடுத்து நிறுத்தி வாழ்வாதாரத்தைப் பாதுகாக்குமாறு மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

பூநகரிப் பிரதேசத்தில் தாம் வாழும் வளமான பகுதிகளில் உள்ள 5 ஆயிரம் ஏக்கர் வரையிலான காணியை இராணுவத்தினர் கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு அரச அதிகாரிகள் துணைபோகின்றனர். இவ்வாறு பூநகரிப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பூநகரிப் பிரதேச மக்கள் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;




1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து பூநகரிப் பிரதேசம் ஒரு சூனிய பிரதேசமாகவே காணப்பட்டது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தாம் இடம்பெயர்ந்து செல்லொணாத் துயரங்களை அனுபவித்து தற்போது மீளக் குடியேறியுள்ளோம்.

அடிப்படை வசதிகள் இல்லை, குடிதண்ணீர் வசதி இல்லை, போக்குவரத்து, சுகாதார, கல்வி மேம்பாடுகள் இல்லை, தொழில் முயற்சிகளுக்கான வளவாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது. வளமான பகுதிகள் எனக் கருதப்படும் இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட பிரதான தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. முக்கொம்பனில் உள்ள 130 ஏக்கர் தென்னம் தோட்டக் காணி இராணுவத்தினரின் பிடியிலேயே உள்ளது. முழங்காவிலில் ஒரே படைப் பிரிவினருக்கு 3000, 700,50 ஏக்கர் என வெவ்வேறு இடங்களில் காணி கோரப்பட்டுள்ளது.

வறண்ட பிரதேசமான பூநகரியில் செழிப்பாக இருக்கும் இடங்களை இராணுவத்தினருக்கு தாரை வார்க்க சிலர் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு, மக்களது நலன் கருதி, எதிர்கால அபிவிருத்திகளுக்காக அந்த நிலங்கள் குடிமக்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட தமிழ் கிராமம் மீண்டும் பொன்விளையும் பூமியாக மாற்றப்படுதல் வேண்டும். இதற்கு சமூகப் பொறுப்புடைய அரச அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் முன்வர வேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

கி.சே. பிரிவு - 19
வாழும் குடும்பங்கள் - 6,350
மொத்த சனத்தொகை - 22,543
காணிகள் அற்று - 180 குடும்பம் வரை

இராணுவ முகாம்கள் – 31 வரை
படையினர் எண்ணிக்கை – 4,500 பேர்

# சட்டவிரோத மது விற்பனைக்கு ஒரே நாளில் 5 லட்சம் ரூபா தண்டம்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் விதித்தது

கிளிநொச்சி,ஏப்.26

கிளிநொச்சியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர்களிடம் சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை நீதிமன்று தண்டப் பணமாக அறவிடப்பட்டது.

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட பலரை, கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தினர். இதன் போதே அனைவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அபராதத் தொகைகள் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் ஒருபோத்தலையும், இரண்டு 'பியர்' ரின்களையும் பொலிஸாருக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டிலும் பத்துப் போத்தல் அரச சாராயம், 26 'பியர்' ரின்கள் என்பவற்றை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும், கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஒருவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது குறித்த குற்றவாளிக்கு சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா ஒரு தொகுதியை தனது உடைமையில் வைத்திருந்த ஒருவர் கடந்த 6 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இவருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் 330 மில்லி லீற்றர் 'பியர்' ரின் ஒன்றை 200 ரூபாவுக்கு விற்றமை மற்றும் 9 'பியர்' ரின்களை தனது உடைமையில் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மற்றுமொருவர் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரும் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 90 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டது.

கிளிநொச்சி பளைப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி 200 மில்லி லீற்றர் அரச சாராயத்தை 300 ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி சுமார் இரண்டாயிரம் மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் நீதிமன்றில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 45 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த 6 ஆம் திகதி 750 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்டார். அவருக்கும் 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் 175 மில்லிலீற்றர் அரச சாராயத்தை பொலிஸாருக்கு விற்பனை செய்தமை, 'பியர்' ரின் மற்றும் அரச சாராயம் என்பவற்றை உடைமையில் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டில் கைதான ஒருவருக்கும் 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## வன்னேரி - தேவன்குளங்கள் இணைப்பு மிதிவெடி அகற்றப்படாமையால் தாமதம்

### கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

அக்கராயன்,ஏப். 26

கிளிநொச்சி வன்னேரிக்குளம் தேவன்குளம் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் அணியினரும் பணிக்கு வரவில்லை. இதனால் இரு குளங்களையும் இணைக்கும் திட்டம் தாமதமடைகிறது என்று கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.




வன்னேரிக்குளத்தில் நடைபெற்ற அபிவிருத்தி பிரச்சினை தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் அணியினர் கடந்த பெப்ரவரி மாதத்தில் குறித்த பகுதியில் தமது பணிகளை இடைநிறுத்திக் கொண்டனர். அங்கு எஞ்சியுள்ள பகுதிகளில் மிதிவெடி அகற்றுவதற்கென புதிதாக எந்தவொரு நிறுவனமும் பணிக்கு வரவில்லை. இதனால் வன்னேரிக்குளத்தையும் தேவன்குளத்தையும் இணைத்து உருவாக்கப்படவுள்ள நீர்த்தேக்கத் திட்டத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

எனவே மிதிவெடி அகற்றும் பணிகள் முடிவுற்றதுமே குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகும் - என்றார். (ஐ-18)

# அழகு சாதனப் பொருள்களில் உலோகங்களும் உள்ளடக்கம்

## தடுக்க வர்த்தமானி அறிவித்தல்



கொழும்பு,ஏப்.26
அழகுசாதனப் பொருள்களில் உலோகப் பொருள்கள் உள்ளடக்கப்படுவதை தடுப்பதற்காக விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட அழகு சாதனப் பொருள் மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.
சந்தைகளில் உள்ள சில அழகு சாதனப் பொருள்களில் சருமத்தை வெளிற வைக்கும் சில களிம்பு வகைகளினால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இத்தகைய களிம்புகளை தயாரிக்க ஈயம் போன்ற உலோகப் பொருள்கள், மற்றும் ஆசனிக் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.
எந்தளவு உலோகப் பொருள்கள் அவற்றுக்கு பயன்படுத்தப்படுகின்றதென சரியாக அறிந்து கொள்ள முடியாததால் அது தொடர்பில் தர நிர்ணய நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று அமைச்சு கூறியுள்ளது. (ச)

# நாட்டைப் பிரிக்க புதிய தந்திரங்கள்

## பனாகொட தளத்தில் மஹிந்த



கொழும்பு,ஏப்.26
ஆயுதங்களின் மூலம் நாட்டைப் பிரிக்க முடியாது என்று உணர்ந்துள்ள ஈழவாதிகள் நாட்டைப் பிரிப்பதற்கு புதிய தந்திரங்களைக் கையாள்கின்றனர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
பனாகொட இராணுவ தளத்தில் இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் படைப்பிரிவுக்கு விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தீவிரவாதத்தை உலகத்தில் இருந்து அழிப்பதற்கு, அதற்கு வெவ்வேறு அடைமொழிகளைக் கொடுப்பதை விட்டுவிட்டு, அதன் இயல்பைப் புரிந்து கொண்டு உறுதியாகப் போரிட வேண்டும்.
தீவிரவாதத்தை தோற்கடித்த நாட்டின் தலைவர் என்ற வகையில், இவ்வாறு கூறுகிறேன். இந்த உண்மையை உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.
எங்கே நடக்கிறது என்பது முக்கியமில்லை. அது ஆசியாவில், அரேபிய நாடுகளில் அல்லது வேறெங்கும் நடக்கலாம். எங்கு நடந்தாலும் தீவிரவாதம், தீவிரவாதம் தான்.
இலங்கை தீவிரவாதத்தை தோற்கடித்துள்ள போதிலும், இன்னமும் பல நாடுகள் அதன் பிடியில் சிக்கியுள்ளன.
சக்திவாய்ந்த நாடுகளின் நகரங்களில் கூட இன்று குண்டுகள் வெடிக்கின்றன. 2009 ஆம் ஆண்டில் இலங்கை துப்பாக்கிகளை மௌனமாக்கியது. அதன் பின்னர், ஈழவாதிகள், ஆயுதங்களின் மூலம் நாட்டைப் பிரிக்க முடியாது என்று புரிந்து கொண்டுள்ளனர்.
எனினும் வெளிநாடுகளில் வசிக்கும் எஞ்சிய தீவிரவாதிகள் நாட்டைப் பிரிக்க புதிய தந்திரங்களை கையாள்கின்றனர்.
நாட்டுக்கு எதிராக எவரும் ஆயுதம் ஏந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. தாய்நாட்டைப் பிரிப்பதற்கு எவருக்கும் அரசு இடமளிக்காது.
நாம் ஆராய்ச்சிகளை செய்ய வேண்டிய தேவை உள்ளது. எமக்குத் தேவையானவற்றை எமது மண்ணிலே நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.-என்றார். (ச)

# கிழக்கு நீதிவான்கள் சிலருக்கு இடமாற்றம்

திருகோணமலை, ஏப்.26
கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றி வரும் நீதிச் சேவை அதிகாரிகள் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.
அந்தவகையில் கல்முனை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம்.றிஸ்வி, வாழைச்சேனை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதிவானாகவும் சம்மாந்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிவான் செல்வி ஏ.கனகரட்ணம், மன்னார் மாஜிஸ்ட்ரேட் நீதிவானாகவும் வாழைச்சேனை மாஜிஸ்ட்ரேட் நீதிவான் எம்.ஏ.றியாழ் மட்டக்களப்பு மேலதிக நீதிவானாகவும் மட்டக்களப்பு மேலதிக நீதிவான் கே.கருணாகரம் சம்மாந்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிவானாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச-40)



திருகோணமலை, காந்திநகர் முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழாவின்போது அம்பாள் உள்வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதைக் காணலாம். (ச-40)

# ஆள்பதிவு திணைக்கள அலுவலகம் கிழக்கிலும்

மட்டக்களப்பு,ஏப்.26
இலங்கை ஆள்பதிவு திணைக்களத்தின் கிழக்கு மாகாண அலுவலகம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனை வடக்கு பிரதேச செயலகத்தில் திறக்கப்படவுள்ளது என்று பிரதேச செயலர் கே.கிரிதரன் தெரிவித்தார்.
இந்த அலுவலகம் அடுத்த மாத இறுதியில் திறக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.
பிரதேச செயலக கட்டடத் தொகுதியில் இதற்கென ஒருபிரிவு ஏற்படுத்தப்பட்ட நிலையில், இந்த அலுவலகத்துக்கான நிர்மாணப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். இதே வேளை ஆள்பதிவு திணைக்களத்தின் வடமாகாணத்துக்கான கிளை அண்மையில் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே. (ச)

# பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்கு

கொழும்பு,ஏப்.26
மின் கட்டண உயர்வை கடந்தவாரம் அனுமதித்த பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய தேசிய மின் நுகர்வோர் இயக்கம் தீர்மானித்துள்ளது.
இவ்வாறான தீர்மானத்தை திடீரென நடைமுறைப்படுத்த முடியாது. அது நன்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகும் என்று அந்த இயக்கத்தின் பேச்சாளர் பந்துல சந்திர சேன கூறினார்.
இது போன்று இலங்கை மின்சாரசபை 2008 ஆம் ஆண்டு மின் கட்டண அதிகரிப்பொன்றை கொண்டு வருவதற்கு முயன்றபோது உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. அப்போது நீதிமன்றம் அந்த மின் கட்டண அதிகரிப்பு முறையை நிராகரித்து மாற் றுத்திட்டம் ஒன்றை முன் வைக்குமாறு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரச பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் கல்முனையில்

அம்பாறை,ஏப்.26
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் 19 ஆவது மேதினக் கூட்டம் கல்முனையில் கோலாக லமாக நடைபெறவுள்ளது.
இந்த மேதினக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் மே முதலாம் திகதி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த மேதினக் கூட்டத்துடன் இணைந்ததாக சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது என்று சங்கப் பொதுச் செயலர் எம்.எம்.ஏ.வகாப் தெரிவித்தார்.
மேலும் வடமாகாணத்தில் சங்கக் கிளைகள் புனரமைக்கப்பட்டும், புதிய கிளைகள், மாவட்டக் கிளைகள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டும் வருகின்றன.
அதனால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் சங்க முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், இணைப்பாளர்கள் இந்த மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.
இதேவேளை மே தினக் கூட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, தமிழ், அரசியல் கைதிகளின் விடுதலை, பொது பல சேனாவைத் தடை செய்யக் கோரல், வடக்கில் ஊடகங்கள் மீதான அராஜகம், போன்ற பல முக்கிய விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என்று சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார். (ச-30)

# திருமலையில் கடும் வெப்பம்

திருகோணமலை, ஏப்.26
திருகோணமலை மாவட்டத்தில் தற்போது நிலவும் அதிகரித்த கடும் வெப்பம் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
திருகோணமலை, மூதூர், கிண்ணியா, ஈச்சிலம்பற்று, தம்பலகாமம், குச்சவெளி ஆகிய பிரதேசங்களில் முற்பகல் 10 மணிக்கு முன்னரே சூரிய வெப்பம் கூடுதலாகவுள்ளது.
அதனால் பல்வேறு தேவைகள் நிமித்தம் வெளியில் செல்வோர் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.
அதன் காரணமான சிறுவர்கள், மாணவர்கள் மற்றும் முதியோர்கள், நோயாளிகள் எனப் பலரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.
வெப்பத்தினால் தோல் நோய், தலையிடி, காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.
வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளிலும் அதிகளவிலான மக்கள் நோய்களுக்காக சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். (ச-40)

# பகிடிவதையில் ஈடுபட்டால் மாணவரின் உறுப்புரிமை ரத்து

## உயர் கல்வி அமைச்சு அறிவிப்பு



கொழும்பு,ஏப்.26
பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்கள் மீது பகிடிவதை மேற்கொள்ளும் அனைத்து சிரேஷ்ட மாணவர்களினதும் உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும் என்று உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
தவறு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் பகிடிவதையை மேற்கொள்ளும் மாணவர்களின் உறுப்புரிமையை நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
பகிடிவதைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
தற்போது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் புதிய கல்வியாண்டுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
அது தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் பகிடிவதை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் சில பல்கலைக்கழகங்களில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகின்றன.
அண்மையில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள் சிலர் பகிடிவதை மேற்கொண்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன.- என்றார். (ச)

# வெள்ளித் தட்டில் வைத்து விடுதலை தரப்படாது...?

தமிழீழத் தந்தை செல்வாவின் 36 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

■ மா.க.ஈழவேந்தன்

தமிழீழ விடுதலை வரலாற்றில் தந்தை செல்வாவுக்கு ஒரு தனியிடமுண்டு. விடுதலை தவறிப் பாடுபட்டுக் கிடந்த ஈழத்தமிழ் சமுதாயத்துக்கு உயிர் கொடுத்து உரிமைக் குரல் எழுப்பச் செய்த பெருமை நம் தந்தை செல்வாவையே சாரும்.

நெருக்கடிக்கு ஈடுகொடுத்த ஒரு தலைவனாக அவர் விளங்கினார். இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காணவே நம் செல்வா விரும்பினார்.

ஏறக்குறைய 30 ஆண்டுகளாகச் சிங்கள மக்களிடமும் சிங்கள தலைமைப்பீடத்திலும் மனமாற்றம் காண எத்தனையோ வழிமுறைகளை, அறக்கோட்பாட்டு அடிப்படையில் காண முயன்றார்.

வெறிகொண்ட சிங்கள இனத்திடம் எத்தகைய மனமாற்றத்தையும் காண முடியாத நிலையில் தான் தமிழீழம் முடிந்த முடிவு என்பதை அவர் மறைவதற்கு ஓராண்டுக்கு முன்பு 1976 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி எந்த வித ஐயத்துக்கும் இடமின்றி வெளிப்படையாக இலங்கை நாடாளுமன்றில் பிரகடனம் செய்தார்.

வேறு சொற்களில் விளம்பின் தமிழீழக் கோட்பாட்டுக்கு வித்திட்ட பெருமை அவரையே சாரும். அவர் தன் குறிக்கோளை அடைவதற்கு முன்பு அவரது உயிர் அவரைவிட்டு நீங்கியது. அவர் கண்ட கனவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இன்றைய இளம் சமுதாயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எம் நம்பிக்கைக்கு ஈடு கொடுக்கும் முறையில் தமிழீழ விடுதலைப் போராளிகள் தம் உயிரையே துச்சமென மதித்து போர்க்களத்தில் குதித்தனர். உயிர் கொடுத்து உரிமைக்காகப் புறப்பட்டிருந்த - உயிர் நீத்த தமிழீழ

> தந்தை செல்வாவின் கூற்றின்படி எமது ஈழ விடுதலையை எந்த சிங்கள அரசும் வெள்ளித் தட்டத்தில் வைத்துத் தரப்போவதில்லை. தமிழீழ விடுதலையைப் பெறுவது என்பது வில்லங்கமான காரியம் தான். நாம் அதற்காகப் போராடியே தீரவேண்டும்.

விடுதலைப் போராளிகள் தம் இலட்சியத்தை அடைவது உறுதி.

உண்மைத் தியாகம் என்றும் வெற்றிபெற்றதே வரலாற்றுச் சான்று.

இந்த விடுதலை உணர்வுக்கு - இந்த விடுதலை வேட்கைக்கு வித்திட்ட பெருந் தலைவர் தந்தை செல்வாவுக்கு நாம் தலை சாய்த்து வணக்கம் செலுத்துவோம்.

பூத்தது தமிழீழம்... புலர்ந்தது தமிழன் வாழ்வு... என்று கவிஞன் காசிஆனந்தன் கண்ட கனவு நனவாகட்டும். கவிஞர்கள் கண்ட கனவு இதுவரை பிழைத்ததில்லை. பாரதி கண்ட கனவு பாரத விடுதலையாக மலர்ந்தது. இக்பால் கண்ட கனவு பாகிஸ்தான் தோற்றத்துக்கு வழிவகுத்தது. பாரதிதாசன் கண்ட கனவு தமிழின எழுச்சிக்கும் தன்மான உணர்வுக்கும் உறுதுணையாக அமைந்தது.


அதே போல் தந்தை செல்வா பட்டபாடும் தன்னையே அர்ப்பணித்த தியாக வரலாறும் தமிழீழத் தோற்றத்தில்தான் முடிவும் என்ற கவிஞன் காசிஆனந்தன் கண்ட கனவு நிறைவேறுவது உறுதி.

தந்தை செல்வா தான் வாழ்ந்த சூழ் நிலைக்கு ஏற்ப அறவழியில் தமிழீழம் காண முனைந்தார். அவர் அறவழியில் விடுத்த வேண்டுகோளை சிங்கள இனம் ஏற்க மறுத்ததன் விளைவு பிரபாகரன் தலைமையில் ஆயுத வழியில் தமிழீழம் மலர போராட்டம் நடைபெற்றது.

2009 இல் புலிகளை ஒழிக்கிறோம் என்று இந்தியாவின் தலைமையில் 22 நாடுகள் எம்மை அழிக்க முனைந்த நிலையிலும் முள்ளிவாய்க்கால் போராட்டத்தோடு எம் வாழ்வு முடிவடையவில்லை என்பதை எடுத்துக்காட்ட ஈழத்தில் குரலற்றுக் கிடக்கும் தமிழ்மக்களுக்காகக் குரல்கொடுக்க நாடு கடந்த தமிழீழ அரசு மலர்ந்துள்ளது.

30 ஆண்டுகள் அறவழியில் போராட்டம் நடைபெற்றது. அடுத்த 30 ஆண்டுகள் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இந்த இரண்டு வழிகளிலும் நாம் விரும்பியதைப் பெறமுடியாத நிலையில் நாடு கடந்த தமிழீழ அரசு உலகின் கவனத்தை ஈர்க்கும் முறையில் உலக நாடுகளில் மனமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இராஜதந்திரப் போராட்டத்தில் இறங்கியுள்ளது.

இதன் விளைவு உலக நாடு



களில் மாற்றங்களைக் காண்கிறோம். ஐ. நா. மன்றத்திலும் நாம் விரும்பும் அளவுக்கு மாற்றங்கள் தென்படுகின்றன.

எம் விடுதலைப் போராட்டத்தில் நாம் பார்வையாளர்களாக இருக்க முடியாது. நாம் அனைவரும் பங்காளிகளாக இருக்க வேண்டும்.

தந்தை செல்வாவின் கூற்றின்படி எமது ஈழ விடுதலையை எந்த சிங்கள அரசும் வெள்ளித் தட்டத்தில் வைத்துத் தரப்போவதில்லை. தமிழீழ விடுதலையைப் பெறுவது என்பது வில்லங்கமான காரியம்தான். நாம் அதற்காகப் போராடியே தீர வேண்டும்.

முற்றிய புற்றுநோய்க்குச் செய்யும் அறுவை வைத்தியத்தில் தான் நாம் இன்று ஈடுபட்டுள்ளோம். நாம் எதிர்க்காவிட்டால் அழிவோம். எதிர்த்தும் அழியக் கூடும். ஆனால் எதிர்த்தால் தப்பும் வாய்ப்பு உண்டு. அழுந்திச் சாவதா அல்லது போராடிச் சாவதா என்ற கேள்வி இன்று எம்மை நோக்கியுள்ளது. போராடினால் நாம் விரும்பிய வெற்றி கிடைக்கும்.

நாடு கடந்த தமிழீழ அரசு நாதியற்ற தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாகக் குரல் எழுப்பிவருகிறது. இன்று தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள மாணவர் கிளர்ச்சி ஒரு வரலாற்றின் திருப்பம். தமிழ் நாட்டு உணர்வைப் புறக்கணிக்க முடியாத நிலைக்கு டில்லி அரசு தள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா. மன்றத்தில் இன்று 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

195 நாடுகள் அங்கம் வகிப்பதற்கு முன்பு "தாயின் மணிக்கொடி பாரீர் தாழ்ந்து பணிந்திட வாரீர்" என்று கூறும் அளவுக்கு ஐ.நா. மன்றத்தில் எங்கள் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறப்பது உறுதி.

கவிஞர். காசியானந்தன் கூறியதற்கு அமைய

"எங்கள் அருந்தமிழ் மண்ணில்
இராவணனார் பொன்மண்ணில்
அங்குலமும் இனி நாங்கள்
அயல் வெறியர் ஆளவிடோம்
சங்குல் விலகின காண்...
எங்கள் தமிழ் மேலாணை
தங்கத் தமிழ் ஈழம்
தமிழனுக்கே... தமிழனுக்கே..."

என்று முழக்கமிட்டு தமிழீழம் காண்பது தான் மறைந்தும் மறையாத எம் தந்தை செல்வாவுக்கு நாம் செய்யும் காணிக்கை.

# நிலத்தடி நீரின் அவசியம் உணரப்படுமா?

■ செ.ரமேஷ்,
உள்ளூராட்சி உதவியாளர்.

இன்று தொழில்நுட்ப மாறுதல்களால் உலகம் சுருங்கியுள்ளது.

அதேவேளை, அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சியால் சமூக முன்னேற்றங்களும் சமூக மாறுதல்களும் இடம்பெற்று வருகின்றன.

குறைந்த நேரத்தில் அதிக பயன்களைப் பெறுவதே நவீன மனிதர்களின் நோக்கம். அதற்குத் துணை போவன அதிநவீன தொழில் நுட்பங்கள். அவை எம் தேவைகளைக் குறுகிய நேரத்தில் வினைத்திறனுடன் பூர்த்தி செய்யினும் அவை மறைமுகமாக எம்மால் மீள முடியாத பெரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தி நிற்பது யாரும் மறுக்க முடியாது.

இதன் வெளிப்பாடுகளே இன்றைய பெரிய பூமி அனர்த்தங்கள், வெப்பமாகும் பூமி, மாற்ற முடியாத உயிர்க் கொல்லி நோய்கள் ஏற்படக் காரணமாகின்றன.

நீண்ட போர் அழிவுகளில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வரும் குடாநாடும் இந்த நவீன தொழில்நுட்ப தொற்றலுக்கு ஆளாகாமல் இல்லை.

நில மட்ட வீடுகள் இன்று வானைத் தொடும் கோபுரங்களாக, மாடிகளாக ஒரு வீடு இருந்த வளவினுள் பல வீடுகள் என்ற நிலையில் அமைகின்றன.

இதுவரை சினிமா வழி பார்த்த நவீன நகரம் இன்று எம் கண் முன்னே உருவாகி வருகின்றது.

பல பரப்பில் கட்டப்படும் வீடுகளும் கட்டடங்களும் இன்று சில குளி நிலங்களிலேயே கட்டப்படுகின்றன. இவற்றைத் தாங்கும் சக்தி எம் நிலத்துக்கு உள்ளதா என்பது இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது.

இதற்கான தொழில்நுட்பம் மட்டும் இன்னும் குடாநாட்டுக்கு வரவில்லையோ தெரியவில்லை. மறைமுகமாக கொண்டு வரப்படாமல் தடுக்கப்பட்டு இருக்கின்றதோ தெரியவில்லை.

இந்த இட நெருக்கடியால் நிலத்தடி நீர் வளத்தையே ஒரு நீர் மூலமாக நம்பி இருக்கும் எம் குடாநாடு தான் நீர் பெறும் வழிமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இதன் வெளிப்பாடே இன்று அதிகளவில் குடாநாட்டில் தோண்டப்படும் குழாய்க் கிணறுகள். கையால் துளையிடுபவர்களாலும் பெரிய இயந்திரங்கள் மூலம் துளையிடுபவர்களாலும் குடாநாடு அம்மணமாக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது என்பதே உண்மை. இதனைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் பெயரளவில் மட்டுமே.

உண்மையில்வெட்டுக்கிணற்றைவிட மிக விரைவாக அமைக்கக் கூடிய குறுகிய இடத்தேவை கொண்ட குறைந்த செலவில் அமைக்கப்படக் கூடியவையே குழாய்க் கிணறுகள். இவற்றின் ஆழ வெளியை வெற்றுக் கண்ணால் காண முடியாது. எமக்கு ஏற்படுத்தும் பெரிய தீங்குகளை எம் மக்கள் அறிந்து கொள்வது மிக அவசியம்.

பாறைகளின் இடையே பல படைகளாக காணப்படினும் இவை நீரின் அழுத்தம் காரணமாக எம் நிலக்கீழ் நீர்ப்படையானது ஓர் வில்லை போன்றே உவர் நீரின் மேல் மிதந்த வண்ணம் உள்ளது.

சாதாரண கிணறுகள் அமைக்கப்படும் பொழுது அவற்றில் நீர் எடுக்கும் அளவும் குறைவாகக் காணப்படும். அத்துடன் எடுக்கப்பட்ட நீர் மீள்நிரம்பலும் அடைய வேண்டிய நேரம் கிடைக்கின்றது. ஆனால் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் பொழுது அவை நீர்த் தாங்குப் படைகளில் பெரிய நீர்த் தளம்பலை ஏற்படுத்துகின்றன. அத்துடன் கனரக இயந்திரங்களைக் கொண்டு குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் பொழுது நிலத்துக்குக் கீழான தரையமைப்பில் பெரிய மாற்றங்கள், வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் நிலத்தடி ஓட்டம் தடைப்படுகின்றது. அல்லாமல் திசை மாறுகின்றது. இதனால் தொலைவில் உள்ள மலக்குழிகளோ, கழிவுகளோ எம் நிலக்கீழ் நீரைத் தொற்றுவதற்க அதிக வாய்ப்புகள் ஏற்படும்.

அத்துடன் இவ்வாறு இயந்திரங்கள் கொண்டு அமைக்கப்படும் குழாய்க் கிணறுகள் அதிக ஆழமாகவும் அதிக நீர் தள்ளும் சக்தி கொண்டவையாகவும் காணப்படுகின்றன. இதனால் அவை அதிகளவு நீரை எடுப்பதற்கு தூண்டுகின்றன. இதனால் உவர் நீரானது வேகமாக மேல் எழும்பல், உட்புகுதல் மூலம் எம் நன்னீர் படைகளை மாசாக்கத் தொடங்கிவிட்டன.

இதேபோன்று நன்னீர்க் கிணறுகளில் நீர் கொள்சக்தியை அதிகரிக்க எண்ணி ஆழமாகக் குழாய்க் கிணறுகளை அமைத்தலின் மூலம் நன்கு அறிந்திருப்பார்கள். அதே போல குழாய்க் கிணறுகள் மூலம் தொடங்கப்பட்ட நீர் விநியோகத் திட்டங்கள் ஆரம்பத்தில் நன்னீரை வழங்கிய போதும் இன்று அவை மாற்றமடைந்துள்ளன.

காலத்தின் தேவைக்காகக் குழாய்க் கிணறுகள் அமைக்கலாம். ஆயினும் அதற்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெற்று மேற்கொள்ளல் வேண்டும். ஆயினும் எம் மக்களுக்கு இந்தத் தொழில்நுட்பம் கைக்கெட்டாத ஒன்றாகவே காணப்படுகின்றது. நிலத்தடி நீரை நாம் உரிய முறையில் பெற்றுக்கொள்ள நீர்ப்புவியியல் ஆலோசனை எனும் நுட்பம் மிக அவசியம் ஆயினும் உரிய தரப்பினரால் இதற்கான கட்டணங்கள் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 40 ஆயிரம் ரூபாவரை அறவிடப்படுகின்றது.

அழிந்து கொண்டிருக்கும் குடாநாட்டைக் காக்க உரிய திணைக்களங்கள் எம் மக்களுக்கு உரிய முறையில் பங்களிப்பை செய்யுமா? நிலத்தடி நீரைப் பேணுவோம் - ஒரு துளி நீரையேனும் தேவையற்று அழிக்காது தேவையோடு பயன்படுத்தி வளம் காப்போம். ★

# மின் கட்டணங்களைக் குறைக்குமாறு அமைச்சர்களும் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.26

நியாயமற்ற விதத்தில் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளமையால் மக்கள் கடும் சிரம நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும், இந்த நிலைப்பாட்டை மாற்றுவதற்கு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி யிடம் கோரியுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி இடம்பெற்றிருந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது மின் கட்டணங்களை உயர்த்துவதற்கு மீளாய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறும் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

இதன்மூலம் மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர்கள் கோரியிருந்தனர்.

இது தொடர்பாக இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்காக எதிர்வரும் தினங்களில் விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனிடையே, அரச தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்து, இவ்வாறு நியாயமற்ற வகையில் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளமையால் தம்மால் மக்கள் முன்தோன்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

எனவே மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதை மீளாய்வு செய்து அதனைக் குறைப்பதற்கு ஆவன செய்யுமாறு அந்த அமைச்சர்கள் பஸிலிடம் கோரியுள்ளனர். (த-22)

# முற்றவெளி வடிகாலால் வாகனங்களுக்கு ஆபத்து



யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்.முற்றவெளிப் பகுதியில் உள்ள யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்னால் மூடப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள வடிகாலுக்குள் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் விழுந்து படுகாயமடைந்தார்.

இந்த வடிகால் நீண்டகாலமாக மூடப்படாத நிலையில் உள்ளதால் அந்தப் பகுதி ஊடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களும் பெரும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

இந்த வடிகால் கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக சீர் செய்யப்படாத நிலையில் உள்ளது.

இதனால் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு எரிபொருள் நிரப்பவரும் வாகனங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றன.

இந்தப் பாதுகாப்பற்ற வடிகாலினால் அந்தப் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக இரவில் வருவோர் அதில் விழுந்தெழும்ப வேண்டிய நிலை காணப்படுகிறது.

இந்த வடிகாலைச் சீர்செய்து தருமாறு பல தடவைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பாதுகாப்பற்ற வடிகாலைச் சீர் செய்வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (த-17)

# பாலியல் துன்புறுத்தல்கள் கடந்த ஆண்டில் 1,740

கொழும்பு, ஏப்.26

கடந்த ஆண்டு ஆயிரத்து 740 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் பாதிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 464 பேர் 18 வயதுக் குட்பட்ட இளம் பராயத்தினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சம்பவங்களில் 89 வீதமான பெண்களும், 11 வீதமான ஆண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவற்றில் ஈடுபட்ட குற்றவாளிகளில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் ஆண்களாவர்.

இதேவேளை - குற்றம் இழைத்தவர்களில் 96 வீதமானோர் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப் பினராகவோ, உறவினராகவோ, அயலில் வசிப்பவராகவோ, காதலனாகவோ, கல்வி கற்கும் பாடசாலை ஆசிரியராகவோ உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் - கடந்த ஆண்டு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஆயிரத்து 159 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இதில் 723 முறைப் பாடுகள் மிகக் கடுமையான, சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் குருநாகல், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# 'அல்வாய் மனோகரா முன்பள்ளியின் பயன்பாட்டில் கணினி'

வடமராட்சி, ஏப்.26

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சி கல்வி வலயத்தின் ஊடாக பெறப்பட்ட கணினி அல்வாய் மனோகரா முன்பள்ளிப் பயன்பாட்டுக்காகப் பாவிக்கப்பட்டு வருவதாக அல்வாய் மனோகரா சனசமூகநிலையத் தலைவர் ந.துரைராஜா தெரிவித்துள்ளார்.

''கணினிப் பயிற்சி வகுப்பை ஆரம்பிக்குமாறு கோரிக்கை'' என்ற தலைப்பில் உதயனில் வெளியான செய்தி தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

சனசமூக நிலைய நிர்வாகம் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை நேரடியாகச் சந்தித்து முன்பள்ளிப் பயன்பாட்டுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி மூலம் கணினி ஒன்றை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

அந்தக் கோரிக்கையின் பிரகாரம் எமது நிலையத்துக்கென கணினி பெற 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு கணினி வழங்கப்பட்டது. கணினியைப் பெற்றுக் கொண்ட எமது நிலையம் அதனை முன்பள்ளிப் பயன்பாட்டுக்காக பாவித்துவருகின்றோம். இந்தக் கணினி சன சமூக நிலையத்துக்கோ அன்றேல் பயிற்சி வகுப்பு நடத்துவதற்காகவோ பெற்றுக் கொள்ளப்படவில்லை.

இதனை அறியாத கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் சி.இரத்தினேஸ்வரன் தனது பரிந்துரையின் பேரில் கணினி வழங்கப்பட்டதாகவும், பயிற்சி வகுப்பு ஏதும் நடைபெறவில்லை எனவும் கூறியிருக்கிறார்.

இதேபோல அல்வாய் மனோகரா வீதி, 33 லட்சம் ரூபா செலவில் திருத்தும் என்ற தலவலும் அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலைய நிர்வாகம் கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளருக்கு நேரடியாக விளக்கம் அளித்த தன் பேரில் 2010 ஆம் ஆண்டு 'நெல்சிப் திட்டத் தின்' கீழ் இந்த வீதி திருத்தப்பட்டது. அந்தநேரத்தில் பிரதேச சபைத் தேர்தல் நடைபெறவில்லை- என்றுள்ளது. (ஒ-8)


**புறோயிலர் குஞ்சு விற்பனைக்கு**

நியூ பேனாட், வகிறா, C.I.C கிறீன்வெலி, புசலாவ சமீர இறைச்சிக் கோழிக்குஞ்சு வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு).

தொடர்பு: 077 595 9663

விநியோகத்தர்: மகாபாம் ஹவுஸ்

**காணி விற்பனை**

உரும்பிராய் வடக்கு (காளி கோயிலடி), பலாலி வீதியில் அமைந்துள்ள 4¾பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

077 970 6680, 077 864 0051

**வான் விற்பனைக்கு**

மகேந்திரா மக்சிமோர் 'வடி' விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 706 6487

யாழ்ப்பாணம்.


## நினைவு அஞ்சலி

தோற்றம் 23 ✩ 10 ✩ 1951

மறைவு 26 ✩ 03 ✩ 2013



அமரர் வல்லிபுரம் நாகராஜா (மாவர் - X - கதிராளர்)

(பொரளை, தெல்லிப்பழை, ஓமான் வைத்தியசாலை)

துடிப்பான இதயமதை நீர் இழந்த போதினிலே
மண்மீது நாம் துடிக்க நீர் அடைந்தீர் மௌனம்
எமக்களித்தீர் பிரபஞ்சஞானம்
எம் அன்புத் தெய்வத்துக்கு கவிமாலை என்றும் சாத்தி
கண்ணீர்ப் பூக்கள் சொரிந்து, கையெடுத்து வணங்கி நிற்போம்.

எங்கள் குடும்பத்தலைவரை இழந்தபோதில்
எம் துயரில் பங்கு கொண்ட அனைத்துக் கருணையுள்ளங்களுக்கும் நன்றியறிதலையும் செலுத்திக் கொள்கின்றோம்.

மனைவி: திருமதி சாந்தினி நாகராஜா
(உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
தலைவி, சுன்னாகம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
மகன் நா.ஆதீசன் (க.பொ.த.உயர்தரம் யா/ இந்துக் கல்லூரி)
ஐயனார் வீதி, அம்பனை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

(36345)(2.6)

## கவிதைத் தொகுதி நூல் வெளியீடு

தென்மராட்சி, ஏப்.26

கவிஞர் சூரியநிலா எழுதிய 'சிற்பிகள்' கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுரையை முதன்மை விருந்தினர் சு.கிருஷ்ணகுமாரும் ஆய்வுரையை கவிஞர் கல்வயல் வே.குமாரசாமியும் நிகழ்த்துவர். (வ-9)

## ஏழாம் வருட ஏக்கமிகு நினைவுகள்

தோற்றம் 07 . 04 . 1944



மறைவு 14 . 04 . 2006

உயர்திரு. சிவக்கொழுந்து இராஜதுரை

திதி: 26.04.2013

என்னுயிரில் கலந்த உறவே!
ஏழு வருடங்களுக்கு முன்னர் இன்றுபோல் ஓர் நாள்
எங்கள் உலகம் நடுங்கியது
உங்களை இழந்தேன் ஆயினும்,

என்னுயிர் உங்களைச் சேரும்வரை
உந்தன் நிஜமான நினைவுகள்....
வாழும்! வளரும்!!

எப்போதும் இனியவளை என் மனத்தே வைத்தேனே.

என்றும் தங்கள் ஆருயிர் மனைவி:
ஸ்ரீமதி தவேஸ்வரி இராஜதுரை
(M.A, M.Phill - ஆசிரிய ஆலோசகர்,
கொழும்பு)

துன்னாலை, ஏழாலை.

(36322)(45.6)



# மைக்ரோசொப்ட் அறிமுகப்படுத்தும் ஸ்மார்ட் கைக்கடிகாரம்

தொடுதிரை தொழில்நுட்பத்தைக் கொண்ட ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் அப்பிள் நிறுவனம் மற்றும் சம்சங் நிறுவனம் என்பன ஏற்கனவே ஈடுபட்டுள்ள நேரத்தில் சற்று தாமதமாக மைக்ரோசொப்ட் நிறுவனமும் களத்தில் குதித்துள்ளது.

இதன் அடிப்படையில் விண்டோஸ் 8 இயங்குதளத்தைக் கொண்டதும் 1.5 அங்குல அளவுடைய தொடுதிரையை உள்ளடக்கியதுமான ஸ்மார்ட் கடிகாரத்தை உருவாக்குவதில் மைக்ரோசொப்ட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

மேலும் இக்கைக் கடிகாரமானது சிறிய கணினி ஒன்றைப் போல செயற்படக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தத்துரூபமான படப்பிடிப்புக்கு அதிநவீன iPhone கமரா வில்லைகள்

iPhone களில் தரப்பட்டுள்ள கமரா வில்லைகளை (Lens) விடவும் வெவ்வேறு குவியத்தூரங்களைக் கொண்டு துல்லியமான மற்றும் தத்துரூபமான படப்பிடிப்புக்களை மேற்கொள்வதற்கென அதிநவீன கமரா வில்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

WoW Lens என அழைக்கப்படும் இப்புதிய வில்லைகளை iPhone இல் நிரந்தரமாக பொருத்திக் கொள்ளக் கூடியதாகக் காணப்படுவதுடன் தேவைக்கு ஏற்றாற்போல் அவ்வில்லைகளை சுழற்றுவதன் மூலம் மாற்றி பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

இவ்வில்லைகளைப் பயன்படுத்துவதற்காக eZoom எனப்படும் விசேட மென்பொருளும் காணப்படுகின்றது.

அத்துடன் இவற்றின் பெறுமதியானது 80 அமெரிக்க டொலர்கள் ஆகும்.





# அதி உயர் திறன்கொண்ட eReader அறிமுகம்

Kobo எனப்படும் நிறுவனமானது அதி உயர் திறன் கொண்ட நவீன eReader சாதனங்களை அறிமுகப்படுத்துகின்றது.

175.7 x 128.3 து 11.7 mm அளவுகொண்ட Aura HD எனப்படும் இச்சாதனமானது 240 g திணிவுடையதாகக் காணப்படுவதுடன் 1440 x 1080 Resolution, 265 dpi உடைய திரையைக் கொண்டுள்ளன.

மேலும் 1 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor, தொடர்ச்சியாக 2 மாதங்கள் வரை சார்ஜ் இருக்கக்கூடிய மின்கலம், 4GB சேமிப்பு நினைவகம் ஆகியனவற்றையும் உள்ளடக்கியுள் ளன.

நிடி-ஊடி தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ள இச்சாதனத்தின் விலை 169.99 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# Toshiba அறிமுகப்படுத்தும் KIRAbook Ultrabook



“2.6 பவுண்ட்ஸ் எடை கொண்ட இம்மடிக் கணினியின் பெறுமதியானது 1599.99 டொலரிலிருந்து 1999.99 டொலர் வரையாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னணி இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் கூணிண்டடிஞச் நிறுவனமானது தனது புதிய உற்பத்தியான KIRAbook Ultrabook மடிக்கணினிகளை அறிமுகப்படுத்துகின்றது.

13.3 அங்குல அளவுடையதும் 2560 து 1440 Pixel Resolution உடையதுமான திரையைக் கொண்டுள்ள இக்கணினிகள் Core டி5 மற்றும் டி7 Processor களை கொண்ட இரு வேறு பதிப்புக்களாகவும் பிரதான நினைவகமாக 8 GB RAM ஆகிய வற்றையும் கொண்டுள்ளதோடு சேமிப்பு நினைவகமாக 256 GB காணப்படுகின்றது.

2.6 பவுண்ட்ஸ் எடை கொண்ட இம்மடிக் கணினியின் பெறுமதியானது 1599.99 டொலரிலிருந்து 1999.99 டொலர் வரையாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# அறிமுகமாகிறது Twitter Music

சமூக வலைத்தளங்களின் வரிசையில் பல மில்லியன் கணக்கான பயனர்களைத் தன்னகத்தே கொண்டு இரண்டாவது இடத்தில் திகழும் டுவிட்டர் தளமானது Twitter Music எனும் சேவையை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக புதிய இணையத்தளத்தை உருவாக்கியுள்ள டுவிட்டரானது ஏற்கனவே உள்ள பயனர் கணக்கு மற்றும் கடவுச்சொற்களை பயன்படுத்தி இத்தளத்தினுள் நுழைந்து பாடல்களைக் கேட்டு மகிழக்கூடிய வசதியைத் தந்துள்ளது.

மேலும் இதற்கென விசேட பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு வருவதுடன், இச்சேவைக்கான பாடல்களை தற்போது iTunes, Spotify அல்லது Radio போன்றவற்றிலிருந்து டுவிட்டர் தளம் பயன்படுத்தி வருகின்றது.



# மின்சாரக் கட்டண உயர்வு அரசுக்கு எதிரான சதியா?

## ஆராயுமாறு கோருகிறார் சம்பிக்க


கொழும்பு,ஏப்.26
மின்சாரக் கட்டண உயர்வு அரசுக்கு எதிரான சதித் திட்டமா? என்பதனை ஆராயுமாறு முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.
வீட்டுப் பாவனையாளர்களின் மின்சாரக் கட்டணத்தை 35 வீதத்தினால் அதிகரித்து அதன் மூலம் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது என்று அவர் கூறினார்.

**மின்சார கட்டண உயர்வு யோசனையை நான் ஏற்றுக் கொள்ள வில்லை.**

நிதி அமைச்சின் செயலர் மின்சாரக் கட்டண உயர்வு குறித்த யோசனையை முன் வைத்திருந்தார்.
கடந்த ஜனவரி மாதம் இந்த யோசனை முன்வைக்கப் பட்டது.
எனினும், இந்த யோசனையை நான் ஏற்றுக் கொள்ள வில்லை என்று அவர் தெரிவித்தார்.
மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பில் நான் எந்த விதமான யோசனைத் திட்டங்களையும் முன் வைக்க வில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



## டிப்பருடன் மோதியது கெப் வாகனம்; புத்தளம் பிரதேசசபை தலைவர் சாவு



கொழும்பு,ஏப்.26
புத்தளம் பிரதேச சபையின் தலைவர் திலுக் சுசார பத்தரகே நேற்று வியாழக் கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து கொழும்பிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் சிலாபம், தெதுரு ஓயா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.
வீதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன்,பிரதேச சபைத் தலைவர் பயணித்த கெப் வாகனம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
அதில் பிரதேச சபைத் தலைவர் உயிரிழந்துள்ளதுடன், கெப் வாகனத்தின் சாரதியான சுஜித் குமார காயங்களுக்குள்ளாகி சிலாபம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்த விபத்துத் தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
திலுக் பத்திரகே கடந்த புத்தளம் பிரதேச சபைக்கான தேர்தலில் ஆளும் கட்சியில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளைப் பெற்று புத்தளம் பிரதேச சபையின் தலைவரானவர். (ச)

## நல்லிணக்கம் தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம்

### அஜித் நிவாட் கப்ரால் குற்றச்சாட்டு



கொழும்பு,ஏப்.26
சிறுபான்மை மக்களின் நல்லிணக்கம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்து இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குற்றம் சாட்டியுள்ளார்.
இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை சமநிலை அற்றது என்று அவர் கூறினார்.
எனினும் மறுசீரமைப்பு விடயத்தில் ஏற்கனவே இலங்கை மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்கா அவதானம் செலுத்தவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, பொருளாதார ரீதியாக மிகவும் வேகமாக வளர்ந்துவரும் நாடு என்ற அடிப்படையில், இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்க மறுக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச)

## வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு பிற்போடப்பட்டது

கொழும்பு,ஏப்.26
இன்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பணிப் பகிஷ்கரிப்பை ஒருவாரத்துக்கு பிற்போட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து நாடு தழுவிய ரீதியில் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலர் சந்திக்க ஏப்பட்டகொட்டுவ தெரிவித்தார்.
எனினும் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அதிகாரிகளுக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

## தானம் வழங்குவது எப்படி

சிரத்தையோடு தானம் கொடுக்கவேண்டும். அசிரத்தையோடு தானம் கொடுக்கக் கூடாது. அதாவது செல்வத்தைக் கொடுக்கும் போதே மனதை மங்களகரமாகவும், சந்தோஷமாகவும் வைத்துக் கொண்டு கொடுக்க வேண்டும். முகத்தைச் சுளிக்காமல் கொடுக்க வேண்டும். மனமலர்ச்சியுடன் தானம் கொடுத்தால் பலன் கிடைக்கும்.
இன்னும் கூடக்கொடுக்க முடியவில்லையே என்ற வெட்கத்தோடு கொடுக்க வேண்டும். வெட்கம் இரண்டு காரணத்துக்காக, ஒன்று இன்னும் கூடக் கொடுக்க முடியவில்லையே என்று, இரண்டாவது தானம் பண்ணுவது வெளியிலே தெரியக் கூடாது என்ற காரணத்துக்காக. வெளியில் தெரிந்தால் மற்றவர்களும் வந்து கேட்பார்கள் என்பதால் அல்ல.
இவன் வள்ளல் என்று நாலு பேருக்குத் தெரிந்து நம்மைப் போற்றினால் நமக்கு அகம்பாவம் வந்துவிடும். அது தானத்தின் பலனை சாப்பிட்டு விட்டுப் போய் விடும். தானம் கொடுப்பதிலும் ஒரு பலனும் இல்லை. இன்னும் பாவமே சேரும்.

ஞானக்கதிர்

## திருமலையில் பெண்களுக்கு உதவ பாதுகாப்பு இல்லம்

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கான உளவளத்துணையை வழங்குவதற்கான பாதுகாப்பு இல்லம் திருக்கோணமலை தேவா நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இந்தஇல்லத்தை கிழக்குமாகாண சமூக சேவைத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.
இந்த இல்லத்தில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்குரிய உளநலப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## மின் கட்டணத்துக்கு எதிராக...



மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக நாடளாவிய ரீதியிலான கையெழுத்து வேட்டை நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

## தடை செய்யப்பட்ட 30 கிருமிநாசினிகள் இலங்கையில் விற்பனை

கொழும்பு,ஏப்.26
தடை செய்யப்பட்ட 30 கிருமி நாசினிகள் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட கிருமி நாசினிகளே இவ்வாறு இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்றன.
சட்டத்தின் அடிப்படையில் குறித்த 30 கிருமி நாசினிகளும் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

## நாட்டில் இலவச சேவைகள் மக்களுக்கு கிடைக்கின்றன

### கிழக்கு சுகாதார அமைச்சர் சொல்கிறார்



அம்பாறை,ஏப்.26
வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட இலவச சேவைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் நம் நாட்டில் கல்வி, சுகாதார சேவைகள் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவது பாராட்டத்தக்கதாகும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் கூறினார்.
கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 2012 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சுகாதார சேவைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
சுகாதார சேவையைப் பொறுத்தவரை நாம் வளங்களை மட்டும் எதிர்பாராமல் இருக்கும் வளங்களைச் சிறப்புறப் பயன்படுத்துவதுடன், அர்ப்பணிப்புடன் சேவையாற்றினால் இலவச சுகாதார சேவை சுமையாக அமையாது என்று அவர் குறிப்பிட்டார்.
சுகாதார சேவையில் அர்ப்பணிப்பு மிக முக்கியமானதாகும். அவ்வாறு அர்ப்பணிப்புடன் எமது சேவைகள் அமையுமிடத்து, சேவையை ஸ்திரத்தன்மையுடன் தக்க வைக்கலாம் என்று அவர் தெரிவித்தார். (ச-30)

## பிரத்தியேக உத்தியோகத்தருக்கு விசேட பிரயாணக் கொடுப்பனவு

திருகோணமலை,ஏப்.26
கிழக்கு மாகாண அமைச்சர்களின் பிரத்தியோக உத்தியோகத்தர்களுக்கு விசேட பிரயாண கொடுப்பனவு வழங்க மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
இந்தக் கொடுப்பனவு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பிரத்தியேகச் செயலர்கள், இணைப்புச் செயலர்கள், பொதுசன தொடர்பு அதிகாரிகள் மற்றும் பிரத்தியேக உதவியாளர் ஆகியோருக்கே வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கு விசேட பிரயாணக் கொடுப்பனவாக மாதாந்தம் 5,000 ரூபா வழங்கப்படவுள்ளது.
கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கே மாகாண அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கடகம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றியடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**சிங்கம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**கன்னி:** மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்வீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். தாழ்வுமனப்பான்மை ஏற்படும்.

**நாளை**

சித்திரை-14 சனிக்கிழமை 27.04.2013
திதி: துதியை மு.இ. 10.02 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.ப. 02.53 வரை
சுபநேரம்: 02.59- 04.29 வரை
இராகுகாலம்: 08.59- 10.29வரை

**துலாம்:** திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். முக்கிய கோப்புகளை கையாளும்போது அலட்சியமாக இருக்க வேண்டாம். அரச காரியங்கள் தாமதமாகி முடியும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

**மகரம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டுமென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**கும்பம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். விமர்சனங்களை கண்டு அஞ்சாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.

**மீனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | | | | | | | |
| 3 | | | | 2 | 8 | 4 | | 6 |
| 8 | 9 | 5 | 3 | | | | | 7 |
| 2 | | | 5 | 7 | 6 | 8 | 4 | |
| | | | | | | | | |
| | 4 | 8 | 2 | 9 | 1 | | | 3 |
| 5 | | | | | 2 | 7 | 8 | 4 |
| 1 | | 7 | 4 | 3 | | | | 5 |
| | | | | | | | 9 | 1 |


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 7 | 6 | 4 | 2 | 8 | 9 | 1 |
| 2 | 6 | 8 | 5 | 1 | 9 | 3 | 7 | 4 |
| 9 | 1 | 4 | 7 | 3 | 8 | 2 | 5 | 6 |
| 7 | 4 | 3 | 2 | 6 | 1 | 5 | 8 | 9 |
| 6 | 5 | 9 | 3 | 8 | 4 | 1 | 2 | 7 |
| 8 | 2 | 1 | 9 | 5 | 7 | 6 | 4 | 3 |
| 1 | 9 | 5 | 8 | 7 | 3 | 4 | 6 | 2 |
| 4 | 7 | 6 | 1 | 2 | 5 | 9 | 3 | 8 |
| 3 | 8 | 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் ரவிக்குமார்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது லவ்லேன், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ரவிக்குமார் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் -காங்கேசன்துறை) நேற்று முன்தினம் (24.04. 2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி சுப்பிரமணியம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சண்முகநாதன்-காஞ்சனாமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜினியின் அன்புக் கணவரும், நித்திலன், பௌர்னிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிச்சந்திரன் (டோகா), ரதி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோகுலன், கோகுலவாணி, ரதிகுலன், காலஞ்சென்ற விசாகேசன் மற்றும் ரோகினி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் லவ்லேன், உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.
021 224 1860

லவ்லேன்,
உடுவில்.

(36385)(6.7.11)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சின்னையா பொன்னுத்துரை**

தாயின் மடியில்
16.01.1936

ஆண்டவனடியில்
06.05.2012

அன்பின் பண்பின் இருப்பிடமே ஐயா
ஆறாதையா எங்கள்துயர் உயிருள்ளவரை
இவ்வுலகில் நீரில்லா நினைவுகள் நம்மை
ஈடாட வைக்குதையா நித்தம் இவ்வுலகில்
உங்கள் உறவுக்கு நிகர் யாருளர் இங்கு
ஊனுடலைவிட்டு நீங்கள் சென்றாலும்
எங்களில் ஒன்றிய உங்கள் நினைவுகளில்
ஏங்கித் தவிக்கின்றோம் தயவின்றி
ஐயனே ஐயங்கள் நீக்கியவரோ அப்பா
ஒய்யாரமாய் ஓடிவிட்டீர் விண்ணுலகு
ஓங்கார வடிவமாய் ஒளிர்ந்திடுவீர் ஆண்டவன் அடியில்

மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.
**செல்லம்மா (மனைவி),**
**நாகேந்திரன் (மகன் குடும்பம் - சுவிஸ்)**

## ஆசிரியர்களுக்கான ஓர் இலவச கருத்தரங்கு

**April 27, சனிக்கிழமை - முற்பகல் 10.30 மணிக்கு**

அரச, தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள், வெளிநாடுகளில் ஆங்கிலம் கற்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் போன்றோரிற்கு உங்கள் கற்பித்தற் திறனை சர்வதேச தரம் வாய்ந்ததாக விருத்தி செய்வதற்கான ஓர் சிறந்த கற்கை நெறி. **(Teaching Knowledge Test) TKT**

கற்கை நெறியின் முடிவில் **(Cambridge - London)** பல்கலைக்கழகத்தினால் சான்றிதழ் வழங்கப்படும்.

**யாருக்கு?**
- Trained English Teachers
- Teachers of National College of Education
- Part time English Teachers ❖ Pre-School Teachers
- Teachers of Private Institutions

**எமது நிறுவனத்தின் ஏனைய கற்கை நெறிகள்**
- Elocution
- Spoken English
- Spoken English with Grammar
- London Syllabus:- English Language, Science and Maths for Students from Grade 1 – O/L.

**CAMBRIDGE ACADEMY OF ENGLISH**
No:140, Parameswara Junction.
Palaly Rd, Thirunelvely.
Jaffna.

தொ.பே: 077 550 8779, 077 725 5543 (சி/8413) (45.6.7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04.07.1973

மறைவு
10.05.2009

**சுப்பிரமணியம் உதயதாஸ்**

புன்னகை பூத்த முகம்
கருணை பொங்கும் பார்வை
களங்கமற்ற உங்கள் உள்ளம்
கடவுளுக்குப் பிடித்ததுவோ!
இரக்கமற்ற இறைவனவன்
உங்களை அணைத்தானோ
உலகமே நீதானென்று
வாழ்ந்துவிட்ட எங்களால்
எப்படி முடியும் இப்படி வாழ
உங்கள் பிள்ளையைத் தேற்ற
வழி சொல்வாயோ எம் ஆருயிரே
மீண்டும் வருவாயோ எங்களிடம்.....

என்றும் உங்கள் நினைவுகளுடன்
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
**மனைவி, மகன்.**

### தந்தை செல்வா நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.26
தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கண்டி வீதியில் அமைந்துள்ள செல்வா அகத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

**Spoken English**
3 மாதங்களில் ஆங்கிலம் பேசுவதற்கான உத்தரவாதம்.
Cell:077 736 3797 By.T.Kuna
V.talk English கொக்குவில்.

## வீடு வாடகைக்குத் தேவை

உரும்பிராய் சந்திக்கும், திருநெல்வேலி சந்திக்குமிடையில் பலாலி வீதிக்கு அருகில் வீடு வாடகைக்குத் தேவை.
தொ.பே: 077 200 2428
(38203) (45.6.7)

## பிரயாணப் பை கைமாறிவிட்டது

23.04.2013 செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பயணிகள் பஸ்சில் (இருதய நோயாளி ஒருவரின்) முக்கிய மருந்துகள் அடங்கிய பை ஒன்று கைமாறிவிட்டது. கைமாறி எடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கின்றேன்.
தொ.பே: 077 618 4487, 077 484 0361
(38398)(6.7.11)

## பாக்கு விற்பனைக்கு

சீவல் தேவைக்கும் ஏனைய தேவைக்கும் உகந்த கொட்டப் பாக்கு மொத்தமாக விற்பனைக்கு உண்டு.
153, கே.கே.எஸ். வீதி,
சந்திரசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 600 7775
(38374) (45.6)

## மரண அறிவித்தல்

### கணபதிப் பிள்ளை பரமசிவம்



நயினாதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 7 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் திருநெல்வேலி தபால் பெட்டிலேன், தலங்காவில் பிள்ளையார் கோவிலடியில் வசித்து வந்தவருமாகிய கணபதிப்பிள்ளை பரமசிவம் நேற்று (25.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ப. மோகனதாஸ்,**
**52, தபால் பெட்டி லேன்,**
**தலங்காவில் பிள்ளையார் கோவில்,**
**திருநெல்வேலி.**
தொ.பே.077 612 4504
(38400) (45.6.7)

## கண்ணீர் அஞ்சலி



சுதுமலை அருள்மிகு
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா
பரம்பரைத் தலைவரும் வைத்திய கலாநிதி
**Dr.T. சிவபாதம்**
அவர்களின் அன்பு மனைவியுமான
வைத்திய கலாநிதி
**சிவபாதம்**
**யோகீஸ்வரியின்**
மரணச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும்
ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
அம்பிகையை இறைஞ்சுகின்றேன்.
ஓம் சாந்தி!

பிரதமகுரு
**ச.மகேஸ்வரக் குருக்கள்.**
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி,
சுதுமலை.
(சி/8414) (45.6.7)

### குழு மோதலில் ஐவர் படுகாயம்

நாவற்குழிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட குழு மோதல் காரணமாக மூன்று பெண் கள் உட்பட ஐந்து பேர் படுகாயமுற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதி யில் கடித்தும் தாக்கியும் காயமடைந்த இளம் பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் நாவற்குழிப் பகுதியிலிருந்து பாலச்சந்திரன் பவித்ரா (வயது-26) சசிக்குமார் செல்வமலர் (வயது-33), இராசையா ஜெயக்குமார் (வயது-33), இராசதுரை சிந்துஜன் (வயது-22) ஆகியோரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (ம-9)

## நவ மகாஜன சிற்பி

அமரர் **தெ.து.ஜயரத்தினம்** அவர்களின்
**நூறாவது பிறந்ததின விழா**



நவ மகாஜன சிற்பி
**தெ.து.ஜயரத்தினம்** அதிபர் அவர்களின்
நூறாவது பிறந்த தினம் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் நாளாகும். மகாஜன சிற்பி அவர்களின் மகோன்னதமான வாழ்வின் பணிகளை நினைவு கூர்ந்து, பாராட்டி, நன்றி கூறும் முகமாக **'நூறாவது பிறந்த தின விழா'** என்ற மகுடத்தில் கொண்டாட உள்ளோம். இதற்கான விழா அமைப்புக் குழுவை ஏற்பாடு செய்வதற்கான விசேட கூட்டம் 2013.04.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

**'நூறாவது பிறந்ததின விழா அமைப்புக் குழுவை'** உயர் தரத்திலும் வினைத்திறன் உடையதாகவும் அமைப்பதற்கு மகாஜன பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் விசேட கூட்டத்திற்கு குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர்,**
**மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**

(C/8418)(2.6.7)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
26.04.1938

விண்ணில்
26.04.2003

வண்ணார்பண்ணை, தட்டாதெரு
அமரர்
**கனகசபை அரசரட்ணம்**
(ரிப்போட்டர்)

அன்பாளனாய் ஆசானாய் இல்லறத்தானாய்
ஈகையாளனாய் உறவினனாய்
ஊக்கமுடையானாய் எல்லாமாய்
ஏகத்துவனாய் ஐயா எம் வாழ்வில்
ஒளியேற்றிய தெய்வம் எட்டாத தூரம்
சென்று பத்து ஆண்டுகளானாலும்
நெஞ்சிலே உங்கள் நினைவுகளை
இருத்தி உமது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Mrs. J. Arasaratnam,
56, Thorndon gardens,
EPSOM, Surrey,
KT190QW, U.K.

உமது அன்பு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 'வீ.ரீ.எஸ்.சிவகுருநாதன்' கிண்ணக் கிரிக்கெட்

# கொழும்பு ஆனந்தா - யாழ்.இந்து யாழ்ப்பாணத்தில் இன்று மோதல்



ஆனந்த கல்லூரி அணியினர் முன்வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக: சமில் பெரேரா (உதவி பயிற்றுநர்), தாமலக்க மஹாமிதாவ, கேணல் எல். எம். டி. தர்மசேன (அதிபர்), லெப்டினன் கேணல் ஜகத் அல்விஸ் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), பிரியன்கர நந்தசேன (அணி சிரேஷ்ட பொறுப்பாசிரியர்), விப்புல சித்தமகே (சிரேஷ்ட பயிற்றுநர்); மத்திய வரிசையில் நிற்பவர்கள்: தகன் விஜேசிங்க, தாரண ரவிந்து, டில்ஷான் அடவத்தஆராச்சி, துஷ்மன்த திசாநாயக்க, சாமுபதி சிறிவர்தன, குஷில் பெரேரா, இசுறு குணசேகர, கச்சிர பூனதல; பின்வரிசையில் நிற்பவர்கள்: தவீன் தனஞ்செய, அதீஷ ராஜரத்ன, லக்கன ஜயசேகர, டிலீப்பா ஜயலத், பசிந்து திரிமதுர.



யாழ். இந்து அணியினர் முன்வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக: எஸ். நிமலன் (பிரதி அதிபர்), சத்தியரூபி சுரேந்திரன் (உதவி அதிபர்), கே. பகீரதன் (அணி பொறுப்பாசிரியர்), வி. வாமணன் (அணித் தலைவர்), வி. கணேசராஜா (அதிபர்), ஜே. சஜகன் (உதவி அணித் தலைவர்), கே. கே. வாசவன் (அணி முகாமையாளர்), பி. ஜெயரட்ணராஜா (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), பீ. ஞானதேசிகன் (பிரதி அதிபர்); மத்திய வரிசையில் நிற்பவர்கள்: பி. ஜனவதசர்மா, ஜே. கஜ்கோகன், ஆர். ருக்ஷ்மன், ஏ. கௌரிசங்கர், எஸ். சாரங்கன், வி. குகனன், எம். சிவஜெனன், ஜ். மதுரசன், என். நிலோஜன் டிலக்சன், ஜே. உதயன்; பின்வரிசையில் நிற்பவர்கள்: ஜே. பானுகோபன், ஆர். கஜநாத், வீ. சிந்துஜன், எம். துவாரகன்.

யாழ்ப்பாணம், ஏப்.26
கொழும்பு ஆனந்தா கல்லூரி அணிக்கும் யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான 'வீ.ரீ.எஸ். சிவகுருநாதன்' கிண்ணத்திற்கான இரண்டாவது வருடாந்த நட்புறவு கிரிக்கெட் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் (26ஆம், 27ஆம் திகதிகளில்) நடைபெறவுள்ளது.
கடந்த வருடம் இடம்பெற்ற ஆட்டத்தில் 10 இலக்குகளால் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி வெற்றியீட்டியிருந்தது. இந்தநிலையில் தனது சொந்த மண்ணில் ஆனந்தாக் கல்லூரியை எதிர்கொள்ளும் இந்துக் கல்லூரி இம்முறை ஆனந்தாக் கல்லூரிக்கு சவாலாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
ஆட்டத்தைக் கண்டுகளிக்க ஆனந்தாக் கல்லூரியின் தற்போதைய மற்றும் பழைய மாணவர்கள் அடங்கிய 200 இற்கும் மேற்பட்டவர்கள் யாழ்.வரவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.26
உடுவில் பிரதேச செயலக பிரிவு இளைஞர் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் இளைஞர் கழக அணியை எதிர்த்து சூராவத்தை நீயுவேறியஸ் இளைஞர் கழக அணி மோதவுள்ளது.
இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனதிராசாவும், சிறப்பு விருத்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ஈஸ்வரராஜா மற்றும் உடுவில் உதவி பிரதேச செயலர் திருமதி செல்வகுமாரியும், கௌரவ விருத்தினார்களக வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் பிரகாஸ் மற்றும் இளைப்பாறிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற-23)



யாழ்.பூப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகள் மற்றும் பிரதம விருந்தினர், யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள். (ற-23)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.26
சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

## தடகளப் போட்டி இன்று

கரணவாய், ஏப்.26
வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டத் தடகளப் போட்டி இறுதி நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-40)


## கழகங்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

வலி. வடக்கு, ஏப் 26
புதிய மற்றும் பழைய வலைப்பந்தாட்ட கழகங்களை மீளப் பதிவு செய்யுமாறு யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கம் அறிவித்துள்ளது.
எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், வலைப்பந்தாட்ட சங்கம், 9/6ஏ மலர்மகள் வீதி, அரியாலை. யாழ்ப்பாணம்.' என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.
யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து வலைப்பந்தாட்ட கழகங்களையும் பதிவு செய்வதன் மூலம் கழகங்களை அபிவிருத்தி செய்வது இலகுவானதாக அமையும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ற-86)

## கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணம்

# கே.ஸி.ஸி.ஸி. அணியை வீழ்த்தியது யாழ். சென்றல்

யாழ்ப்பாணம், ஏப்.26
கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்திற்கான 30 பந்துப்பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.
கடந்த வாரம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி, கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக



அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.
அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி வியைட்டுக்கழக அணி 18.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களை பெற்றது.
பங்குயன் 26ஓட்டங்களை கே.ஸி.ஸி.ஸி. அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றார்.
பந்து வீச்சில் யாழ் .சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பில் யசிந்தன் 5 இலக்குகளையும், சலிஸ்ரன் 2 இலக்குகளையும், றஜீவ்குமார், சுபாதிஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
104 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக் கழக அணி 9 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
அதில் பாலேந்திரா 30 ஓட்டங்களையும், யசிந்தன் 24 ஓட்டங்களையும், விஸ்ணு 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி சார்பில் நிரோஜன், பபிதன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சிலோஜன் 2 இலக்குகளையும் பார்த்தீபன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.(ற-23)

## வவுனியா மாவட்ட பாடசாலை பெரு விளையாட்டு ஆரம்பம்

வவுனியா, ஏப்.26
வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது என்று வவுனியா வடக்கு உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.மங்களகுமார் தெரிவித்துள்ளார்.
ஆண்களுக்கான துடுப்பாட்டம் புதுக்குளம் ம.வி. மைதானத்திலும், பெண்களுக்கான துடுப்பாட்டம் ஓமந்தை மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது என்றும், மாணவர்களை காலை 8 மணிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ற-422)

## வலிகாமம் வலய கபடி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.26
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கபடி போட்டியில் 19வயதுப் பிரிவில் இளவாலை கன்னியார் மடம் மகா வித்தியாலய அணியும், 15 வயதுப் பிரிவில் பண்டத்தரிப்பு யசிந்தா றோ. க. வித்தியலய அணியும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.
19 வயதுப் பிரிவில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியலய அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க. வித்தியலய அணி மோதியது. அதில் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியலய அணி 39:30 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது .
தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க. வித்தி யலய அணியை எதிர்த்து நவாலி மகா வித்தியாலய அணி களமிறங்கியது. அதில் பண்டத்தரிப்பு யசிந்தா மகா வித்தியாலய அணி 44:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகியது. (ற-23)

## சாதனையை முறியடிக்க மறுபிறவி வேண்டும்



சச்சினின் சாதனையை முறியடிக்க வேண்டும் என்றால் அவர்தான் மறுபிறவி எடுக்கவேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் திலிப் வெங்சர்க்கார் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் சச்சினைப் பற்றிய புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியதாவது:

''சச்சின் நீண்ட நாள்கள் விளையாட வாழ்த்துக்கள். எதிர்வரும் நவம்பர் மாதம் இந்திய அணி தென்னாபிரிக்கா செல்லவிருக்கிறது. அது கடினமான தொடராக அமையும்.

எனினும் அதில் விளையாடும்போது சச்சின் 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற சாதனையை படைப்பார். அது மிகச் சிறந்த சாதனையாகும்.

சச்சின் சாதனையை யாரால் முறியடிக்க முடியும் என்று மக்கள் என்னிடம் கேட்கலாம். ஆனால் சச்சினின் சாதனையை மற்றவர்களால் முறியடிக்க முடியும் என்று நினைக்கவில்லை.

சச்சினுடைய சாதனையை முறியடிக்க வேண்டும் என்றால் சச்சினே மறு பிறப்பெடுக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன்''- என்றார். (ற)

## சச்சினின் பிறந்தநாள்



இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கடந்த புதன்கிழமை தனது 40ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

மும்பை இண்டியன்ஸ் அணி நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பிறந்தநாள் விழாவில் சச்சினுக்கு அவருடைய மனைவி அஞ்சலி கேக் ஊட்டினார்.

பிறந்தநாள் நிகழ்ச்சியில் சச்சின் பேசுகையில்:

''40ஆவது பிறந்தநாளில் கேக் வெட்டியபோது சற்று பதற்றத்தோடு இருந்தேன். முன்னெப்போதும் இப்படி ஒரு பதற்றம் ஏற்பட்டதில்லை. எனினும் அனில் கும்ப்ளேவின் வாழ்த்து என் பதற்றத்தை தணித்து என்னை அமைதியாக்கியது. எனக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்த கும்ப்ளே, கவலைப்பட வேண்டாம். 40 என்பது வெறும் எண் மட்டுமே' என்றார். அதனால் ஓரளவு என்னுடைய பதற்றம் தணிந்தது,'' என்று தெரிவித்தார் சச்சின். (ற)

## அடுத்த சுற்றில் சாய்னா



'இந்தியன் ஓபன் சூப்பர் சீரிஸ்' பூப்பந்துத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குள் நுழைந்தார் இந்திய வீராங்கனை சாய்னா நேவால்

சாய்னா முதற்சுற்று ஆட்டதில் 21-12, 21-15 என்ற நேர் செற்றில் இந்தோனேஷியாவின் பெலாட்ரிஸ் மனுப்தியை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு இந்திய வீராங்கனை பி.வி.சிந்து கடும் போராட்டத்தின் பின்னர் சீனாவின் சுய்யாவை வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய நம்பிக்கை வீரர் காஷ்யாப் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். அவரை இந்தோனேஷியாவின் தவ்பிக் ஹிதாயத் 13-21, 23-21, 21-18 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார். (ற)


**ஷாம்சன்** 3 மாத ஆங்கில பயிற்சிப் பட்டறை

வாரநாள் பிரிவு - 29.04.2013 திங்கள்

பிரிவு I 09-10 பிரிவு II 03-04

சனி, ஞாயிறு பிரிவு - 27.04.2013 சனி

பிரிவு I 08-10 பிரிவு II 10-12

பிரிவு III 01-03 பிரிவு IV 03-05

29.04.2013 முன் பதிவு செய்வோருக்கு ரூபா 500 பெறுமதியான புத்தகம் இலவசம்

ஷாம்சன் 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ். T.P: 077 621 4567 (C/8406)(10,6,7)

**மணல் மண் வேண்டுமா?**

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம் 072 63 78 546 (36276) (10,6)

விளம்பரத் தொடர்புகளுக்கு: 0215671111

**CAR FOR SALE**

TOYOTA 121X GRACK 2004 FULL OPTION AUTO 1500CC BEAGE INTERIOR ALLOYWHEEL THREE HEADREST CD. WHITE COLOUR GOOD CONDITION. PRICE NEGOTIABLE. CONTACT NO- 0773400555, 0772247514

**A/L வரலாறு-2015**

மாவட்ட, தேசிய மட்டங்களில் வரலாறு பாடத்தில் உயர்பெறுபேற்றிற்கு வழிகாட்டும் ஆசிரியர் M. பத்மன் B.A(Hons) M.A (History)

* A/L-2015 புதிய மாணவர்களுக்கு சகல அலகுகளும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
* A/L-2012 இல் A தரச்சித்திபெற்ற 52 மாணவர்களுக்கும் A/L-2011 சட்டத்துறை, ஏனைய துறைகளுக்குத் தெரிவான மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கற்பிக்கும் இடங்கள்: D.M.I யாழ் நகர். உயர் கலைக் கல்லூரி, குளப்பிட்டி. புகழ் மானிப்பாய். (36396) (10,6,7)

**கனடாவில் படிக்க உழைக்க**

நேற்றுவரை....
நாங்கள் உங்களுக்குத் தெரிவித்த கட்டணத்தில் பாதிக்கட்டணமே - இன்றிலிருந்து 4தினங்களுக்கு

விரையுங்கள்!விரையுங்கள்!!

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 56 89090

**சமையலாள் தேவை**

எமது பரணி கிறீம் ஹவுஸ் நிறுவனத்துக்கு ஆண் சமையலாள் ஒருவர் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொலைபேசி இலக்கம்: 0779186284 (36367) (10,6,7)

கே.கே.எஸ். றோட், கொக்குவில் சந்தி, கொக்குவில்.

**டோஹா,கட்டாரில் உடனடி வேலை வாய்ப்பு**

பொறியியல் நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கீகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக உடன் வேலை வாய்ப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| மேசன் | 1200 -1500 | பொது உதவியாளர் | 900-1000 |
| எலக்ரீசியன் | 1200 -2000 | லேபர் | 900 - 1000 |
| பெயின்டர் | 1200 - 1500 | கிளினிங் லேபர் | 800 - 1000 |
| Plumber | 1200 - 1500 | Mechanic | 1200 - 2000 |
| கம்பிகட்டுபவர் | 1200 - 1500 | Mechanic Helper | 1000 |
| காப்பென்டர்ஸ் | 1200 - 1500 | Valied Licenseor | |
| 6G Weldares | 1200 - 1500 | Gautar License | 1500 - 2000 |

உங்கள் விண்ணப்பங்கள், பாஸ்போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர்வரும் 27.04.2013 A9வீதி பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28 ஆம் திகதி இல.33, ஆசீர்வாதம் லேன், ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹோட்டல் யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

LL No - 2490
உடன் தொடர்புகளுக்கு வவுனியாவில் 0777 929475,0772393165

தலைமை நிறுவனம் - Air Trust
Overseas Manpower Consultant,
945, Maradana Road, Borala,Colombo -08.
011 2676777, 0772393165 (25226)

**ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவுகூரல் நிகழ்வும்**



அமரர் தங்கராசா அசோகலிங்கம்
(ஆசிரியர்) B.com, P.G.D.E, M.Ed

கடந்த 25.03.2013 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (27.04.2013) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கொற்றாவத்தை சித்தி விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மலர் மாளிகை, வல்வெட்டி.
T.P: 0777763396.
(35336)(10,6,7)

குடும்பத்தினர்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளது

வங்கியியல் கற்கைநெறிகள்
CBF&DBF

Chartered
CAB 1 & CAB 11

External degree
GAQ, BA1, BA (Final)
1st m com, BCOM(part 1), BCOM(part 11), BCOM(final)
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

Further Details
JAFFNA COLLEGE UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382

புதிய பிரிவுகள் ஆரம்பம்

29-04-2013(SAT)
Certificate course in English
(6 months)
Sat & Sun 8.30-12.30

Spoken Sinhala
(6 months)
Sat & Sun 7.00-9.00

Further Details
JAFFNA COLLEGE UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்





அன்னையின் கரத்தில்
*16.05.1947*

ஆண்டவன் தாளில்
*21.04.2008*

திதி:
அபரபக்க பிரதமை

## திருமதி ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்


கண்ணீரில் கரைந்ததம்மா ஆண்டுகள் ஐந்து
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதம்மா!
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே தாயே சென்றாய்?
எம் உயிர் உள்ளவரை உம் நாமம் மறவோம்
எம் தாயின் ஆத்மா சாந்தியடைய
இறைவனடி வேண்டுகின்றோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(36278)(2.6.7)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



24.04.2013 அன்று காலமான எமது
கூட்டுத்தாபனத்தின் சக ஊழியர்

## சுப்பிரமணியம் ரவிக்குமார் (ரவி)

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு
எமது கூட்டுத் தாபன ஊழியர்கள்
சார்பில் அன்னாரது குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய்
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**ஊழியர்கள்.**

**இலங்கை பெற்றோலியம்**
**ஸ்ரோரேஜ் ரேர்மினல் லிமிட்டட்**
**(C.P.S.T.L) காங்கேசன்துறை.**

(C/8407)(2.6.7)

# ஆறாத் துயரம் அப்பாவின் பிரிவு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13.03.1943 | 21.04.2008 |

## கந்தையா மகாதேவன்

**திதி: அபரபக்க சித்திரைப் பிரதமை - 26.04. 2013**

ஆனதோ ஐ அகவை எம் அன்புடை அப்பாவே!
நீங்களெமை விட்டகன்று
நித்திய அகம் புகுந்து வானகம் எய்தி
வானுறை தெய்வத்தின் திருவடி சேர்ந்து

போனதோ எம் மகிழ்வும்முடன் தீயினிற் சோர
வானமும் வையமும் வாழ்த்த வாழ்ந்த வாழ்வது வலி குன்றியதோ
இனி வாருமோ ஈங்கிவ் வையத்து மீளவொரு சேருமோ
எம்மில்

பாட்டன் பாட்டியின் புக்கிடம் பார்க்கவே பாதியில் எமைவிட்டுக்
காட்டெருமை வாகனன் கடிதுணை கைசேர
பாசம் அறுத்து பாசம் சிக்கிப் பறந்தீரோ ஐயா!
மாற்றுலகு.

குல முதலே மாதேவனே மனிதருள் மாணிக்கமே மாசற்ற நல் மனிதனே
எழுத்தறிவித்த எம்மாசானே எந்தையே! ஞால மாயையறுத்து
மறலி கரமேகி உம்பர் உறைவிடம் நாடி ஓடிற்றோ உம் ஆவி.
வல் விதி நிற்க.

தவிக்கிறோம் தரணியில் தலை இல் வெற்றுடலாய் தம் பிரிவு தாழா
மெய் ஆவிசோர அங்கலாய்த்து நிற்கும்
தங்கள் அடிவரு கிளை குடி சுற்றம்.

**மனைவி, பிள்ளைகள்.**

**195, அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.**

(36375) (45.6.7)

# தொழிற்சங்கப் பேச்சில் முக்கிய விடயங்கள் ஆராய்வு

அம்பாறை,ஏப்.26

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்துக்கும் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கும் இடையே நடைபெற்ற தொழிற்சங்கப் பேச்சு வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது என்று பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேச்சின் போது வடமாகாணத்திலுள்ள அலுவலகப் பணியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் பிரச்சினைகளைப் பொது ஊழியர் சங்கம் முன்வைத்து பேச்சு நடத்தியது.

இந்தப் பேச்சில் வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர், உறுப்பினர்கள், வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் செயலர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடமாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் தொழிற்சங்கப் பேச்சின் போது சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 10 முக்கிய கோரிக்கைகள் தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டதாகப் பொது ஊழியர் சங்கச் செயலர் எம்.எம். ஏ.வகாப் தெரிவித்தார்.

அவற்றுள் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்குரிய நிரந்தர நியமனம் வழங்கல், வகுப்பு II,I பதவி உயர்வு வழங்கல் மற்றும் சீருடைக் கொடுப்பனவு தொடர்பில் ஆக்க பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள உறுதியளிக்கப்பட்டது.



மாகாண இணைந்த சேவை சார்ந்த ஊழியர்களது பதவி உயர்வு வெளிவாரி அடிப்படையில் வடமாகாண திணைக்களங்கள், அமைச் சுக்களில் சேர்த்துக் கொள் ளப்பட்ட ஊழியர்கள், சார திகள் விடயமுட்பட பல விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடுகள் காணப்பட்டன.

அவை தொடர்பாக பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற சேவைப் பிரமாணம் என்பவற்றைக் கவனத்தில் கொள் ளவும் இணக்கம் காணப்பட்டது.

திணைக்கள தலைவர்களும், ஆணைக்குழு உறுப்பினர்களும் இணைந்து விடயங்கள் தொடர்பில் தமது பரிந் துரைகளை வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி அவரது அனுமதியுடன் செயற் படுத்துவதெனவும் முடிவு செய்யப் பட்டது. (ச-30)

## 'கள்' வைத்திருந்த குற்றத்துக்கு ரூ.11000 அபராதம்

அனுமதியின்றி மேல திக 'கள்' வைத்திருந்த 22 பேருக்கு நீதி மன்றினால் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் 22 பேருக்கும் எதிராக யாழ். மது வரிப் பரிசோதகர்கள் வழக்குப் பதிவு செய் திருந்தனர். நீதிமன்றில் அனைவரும் தம் மீதான குற்றத்தை ஒப் புக் கொண்டதையடுத்து தலா 500 ரூபா வீதம் அபராதம் விதிக் கப்பட்டது. (ந-4)

## விற்பனைக்கு

(64-xxxx) Toyota டீசல் கார்,15HP 3 Phase Motor விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- து.ஜெயராஜா. 0773714828

## விற்பனைக்கு

Bently - 125 158 - xxxx UL - xxxx
MF - xxxx GD - xxxx 151 - xxxx
Van Toyota 62 - xxxx Long Model
Dual AC 24.75
0776292625, 0773580989

## மரண அறிவித்தல் சின்னத்துரை பரமானந்தசிவம்

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமானந்தசிவம் நேற்று முன்தினம் (24.04.2013) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சௌந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், கலைவாணியின் அன்புக் கணவரும் சுதாகர், நிசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2013) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லியடி ம.ம.வித்தியாலய வீதி, நெல்லியடி. (சி/8415) (23-16) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### தம்பையா செல்வரட்ணம் (RE)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா செல்வரட்ணம் (RE) கடந்த (23.04.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ண பிள்ளை மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயலக்சுமியின் (குஞ்சு) அன்புக் கணவரும் பிறேம்நாத் (France), பிரகலதா (London), பிறேமா (பிரியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாகரனின் அன்பு மாமனும் சுஜின், பிறிட்டிகா, சுகந் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் குணரட்ணம், நவரட்ணம், இராசம்மா இரட்ணம், விக்கினேஸ்வரி, இராசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28/04/2013) அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. 0776462254. (C/8417) (23-16)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராஜேஸ்வரி கணேசமூர்த்தி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி கணேசமூர்த்தி நேற்று முன்தினம் (24.04.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி (யா/ஐக்கிய வியாபார சங்க முன்னாள் முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவநாதன், நகுலேஸ்வரி, பத்மநாதன், விக்னேஸ்வரி மற்றும் புஸ்பநாதன், சத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகநாதன் (யா/ ஐக்கிய வியாபார சங்கம்), நந்தினி, உமாபுத்திரன், அம்பிகை, உமாகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், மங்களேஸ்வரி, பாலசுப்பிரமணியம், ஜெயந்தினி, சிவபாலன், ஜெயந்தி ஆகியோரின் மாமியும், விக்கினராஜா, பவானி, நாகபூஜா, உமாபிரசாத், யதுஷா, அர்ஜீன், சதுர்ஷா, மிதுஷனா ஆகியோரின் பேர்த்தியும் கவிஸ்கார், மதிலன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2013) சனிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.077 617 4873 (36411) (45.8.7) தகவல்: பிள்ளைகள்

## மணிவிழா வாழ்த்துக்கள்



தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று மணிவிழாக் காணும்

உயர்திரு. தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா

அவர்களை இன்று போல் என்றும் புன்னகை தவழ்ந்திடும் சிறப்புடன் நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

குறிப்பு:- 'மணிவிழா' நாளை (27.04.2013) சனிக்கிழமை காலை 9 மணிக்கு யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும். அனைவரையும் விழாவில் கலந்து நாயகனை வாழ்த்த அன்புடன் அழைக்கின்றோம்.

தென்மராட்சிக் கல்வி வலய
ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்.

(36404) (23-16)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்மலர் தவராசலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை, யா/இடைக்காடு ம.வி.)



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மலர் தவராசலிங்கம் நேற்று (25.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - தவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான தவராசலிங்கத்தின் அன்பு மனைவியும் நரேந்தின் அன்புத் தாயும் குமரேச பசுபதி, செல்வநாயகி, சிவபாக்கியம், மாணிக்கவாசகர், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஸ்வரன், சிவனேஸ்வரன், ஜெகதீஸ்வரி, சத்தியேஸ்வரி, சிவனேஸ்வரி, விமலேஸ்வரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2013) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
த.நரேந் (மகன்)

# அறுபதாவது அகவை நிறைவில் – ம

# 35 வருட அரச சேவையி

# திருவாளர் சுப்பிரமணியம் புத்திசிகா

## சேவை நலன் பாராட்

### சேவை விவரம்

முகாமைத்துவ உதவியாளர் சேவை - தேசிய வீடமைப்
(யாழ்ப்பாணம்,

நிர்வாக உத்தியோகத்தர் - பிர்தேச செயல
புனர்வாழ்வு செ

உதவி அரசாங்க அதிபர் - பிரதேச செயல

உதவி திட்டப்பணிப்பாளர் - மாவட்டச் செய

சுனாமி திட்ட இணைப்பாளர் - பிரதேச செயல

செயலாளர் - பிரதேச சபை,

செயலாளர் - நகராட்சி மன்ற



### மனிதருள் மாணிக்கம்

நற்பண்புகள் என்பது கருவிலே உருவாகி உயிரிலே வளர்ந்து வருவதாகும். இவ்வாறு உருவாகியவர் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பார்கள் என்பது மணிவிழா நாயகரது வாழ்வு எடுத்துக்காட்டும் ஒரு நற்செய்தியாகும். பிறப்பினாலேயே பல அதிசயமான நற்குணங்களால் நிரம்பிய புத்திசிகாமணி அவர்கள் தனது சேவைகளால் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்பவர் ஆவார். தான் பணியாற்றிய இடம் எல்லாம் தனக்கென்று ஓர் இடத்தினை நிலைநாட்டிய பெருமைக் குரியவர் என்றால் மிகையாகாது. இதனை இவர் பணியாற்றிச் சென்ற இடங்களில் இன்றும் இவரது பெயர் சொல்லும் அளவில் சேவைகளுக்கான அடித்தளத்தினைக்காண முடிகின்றது. மக்கள் பணிகளில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு ஓர் உதாரண புருசராகத் திகழ்பவர் மணிவிழா நாயகர் ஆவார். இவரது அனுபவம் மற்றவர்கள் வாழ்விற்கு எடுத்துக் காட்டாகும். அந்தளவிற்கு சிறப்புற பணியாற்றிய பெருமைக்குரியவர். வருங்கால அரச உயர் அதிகாரிகளாக வர இருக்கும் இளம் அரச உத்தியோகத்தர்களுக்கு இவர் ஒரு வழிகாட்டி ஆவார். தான் ஒரு கிறிஸ் தவராக இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் எமது இந்து சமய விழாக்களில் கலந்து கொண்ட சந்தர்ப்பத் தின் போதெல்லாம் வேற்றுமை காட்டாது இந்து சமய குருமார்களுக்கும் சமயத்திற்கும் தகுந்த இடம் கொடுத்து கௌரவித்தமை அனைவராலும் பாராட்டப்பட்டது.

இவர் சிறந்த தமிழ் இலக்கிய ஆர்வலர், தமிழ் மொழிப்பற்றாளர், பல நூல்களின் சொந்தக்காரர். இவர் தனது கிராமத்தின் மீது மிகுந்த விசுவாசம் உடையவர். இவர் தனது குடும்பத்தில் பெற்றோருக்கு நல்ல பிள்ளையாகவும், மனைவிக்கு நல்ல கணவனாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாகவும் இருப்பதனால் சமூகத்தில் நல்ல அரச உயர் அதிகாரியாகவும் திகழ்ந்தார் என்பதுதான் உண்மையாகும். சமூகத்தில் நற்குண, நற்செயற்பாடுடைய மனிதர்களைக் காணுதல் அரிதாகி விட்ட இன்றைய காலத்தில் புத்திசிகாமணி அவர்கள் மனிதருள் மாணிக்கம் ஆவார். அவருக்கு மணிவிழா எடுப்பது என்பது அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் எதையும் துணிந்து செய்யும் துடிப்பிற்கும் நற்பண்பிற்கும் எடுக்கும் விழாவாக நான் கருதுகின்றேன். மணிவிழா நாயகன் எமது பிரதேச சபையின் செயலாளராக இருந்து பணியாற்றியமை எமக்குக் கிடைத்த பெருமையாகும்.

அன்பர் புத்திசிகாமணி அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும், வாழ்வு மகிழ்வும் அமைதியும் உள்ளதாக அமையவும் நலமாக வளமாக வாழ வாழ்த்தி மணிவிழா சிறக்க எல்லாம் வல்ல சித்தன்கேணி ஸ்ரீ சிவகாமிபாகர் சிதம்பரரேஸ்வரர் துணையுடன் ஆசீர்வதிக்கின்றேன்.

சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள்
தலைவர்,
இந்துக் குருமார் ஒன்றியம்.



### யாழ் குருமுதல்வரின் ஆசிச் செய்தி

கடந்த 34 வருடங்களுக்கு மேலாக அரச சேவையாற்றி தனது 60ஆவது வயதில் இளைப்பாறும் மணிவிழா நாயகனின் சேவைகளைப் பாராட்டக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். நான் கொழும்பிலும் மலையகத்திலும் ஊழியம் செய்த காலத்தில் இவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இவர் J.C.M.A. என்ற அங்கிலிக்கன் திருச்சபையின் ஒன்றியத்தில் பொருளாளராக இருந்துள்ளார். முத்திரைச் சந்தி செம்மணி வீதியில் அருகில் உள்ள புனித ஜேம்ஸ் தேவாலயத்தில் நீண்ட காலம் மக்கள் காப்பாளராக சேவை செய்துள்ளார். அத்துடன் குருவின் வழிபாட்டு உதவியாளராக தொடர்ந்தும் பல ஆண்டுகளாக ஆன்மீகப் பணி ஆற்றி வருகின்றார். அத்துடன் யாழ். YMCA நிறுவனத்தில் 20 வருடங்களுக்கு மேலாக ஆளுநர் சபை உறுப்பினராக இருப்பதுடன் இரு தடவைகள் தலைவராகவும் உபதலைவராகவும் இருந்துள்ளார்.

அரச பணியின் நிறைவில் இன்று ஓய்வு பெறும் திரு.சுப்பிரமணியம் புத்திசிகாமணி தொடர்ந்தும் தன் வழிகாட்டலால் பலரை உயர்வடையச் செய்ய இறைவன் தாமே இவருக்கு நல் உடல், உள ஆன்மீக நலன்களைக் கொடுத்து வழிநடத்த இறை ஆசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்பணி S.J.ஜெபவீரசிங்கன்,
இலங்கைத் திருச்சபை, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.



### நல்ல நிர்வாகி

அரச துறையின் பல்வேறு பதவி நிலைகளில் முப்பத்தைந்து ஆண்டுகள் அரும்பணியாற்றி ஓய்வுபெறும் திரு. சுப்பிரமணியம் புத்திசிகாமணி அவர்களை வாழ்த்துவதிலும் பாராட்டுவதிலும் அகமகிழ் வடைகிறேன்.

உடுத்துறை மண்ணில் பிறந்த இவர் 1979 இல் பொது எழுதுநர் சேவையினூடாக அரச பணியில் இணைந்து படிப்படியாக பதவியுயர்வடைந்து 1998 இலிருந்து 2004 வரை பளை உதவி அரசாங்க அதிபராகவும், அதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளராகவும் பணியாற்றி அப்பிரதேச மக்களின் மனங்களில் உயர்வான இடத்தை அடைந்தார். தற்போது சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெறுகிறார். நகரசபையின் சிறப்பான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டுள்ளார்.

இவர் நல்லதொரு நிர்வாகி என்பதற்கும் அப்பால் நல்லதொரு கலைஞனாகவும் இருந்து வந்துள்ளார். சிறந்த நாடக நடிகன், எழுத்தாளன், கலையுள்ளம் கொண்ட வளர்ந்த குழந்தை நல்ல மனிதன்.

வாழ்க பல்லாண்டு.

திரு.சு. அருந்தவபாலன்,
முதல்வர், யா/ஹாட்லிபேர்க் கல்லூரி.



### நல்ல மனதுடை யோர் நல்வாழ்வுடை யோர்

நல்ல மனதுடையோர் நல்ல சேவைகளைச் செய்வர். நல்ல சேவையானது, நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கும். நல்ல சமுதாயம் நல்ல வாழ்க்கையை மக்களுக்குத் தரும். மேலும் அது நல்லதோர் எதிர்காலத்தையும் உண்டாக்கும். அத்துடன் அது நல்ல மனதுடையோரின் வாழ்க்கையையும் சிறப்பிக்கும். இத்தகைய சிறப்புடையவரே சாவகச்சேரிப் நகர சபையின் செயலாளராக பணியாற்றியவர் புத்திசிகாமணி அவர்கள். இவர் நல்மனமும் நற்பண்புகளும் நன்நோக்கும் நற்செயலும் உடைய ஒருவர். இத்தகைய சிறந்த குணங்களின் மூலமாக திரு. புத்திசிகாமணி பல தரப்பினரிடமும் பெருமதிப்பைப் பெற்றவர். ஒரு அரச அதிகாரி என்பதற்கும் அப்பால், சமூகத்தின் பல அடுக்குகளிலும் செயற்பட்டு மக்களின் இன்னல்களைக் களைந்தவர். இவருடைய சேவைக்காலமும் சேவைக்களங்களும் நெருக்கடிகள் பல நிறைந்த போர்க்காலத்தையும், போர் நடந்த பிரதேசத்தையும் உடையவை. எனினும் தன்னிடத்தில் வளர்த்துக் கொண்ட அசாத்தியமான துணிச்சலினாலும் சமயோசித நடவடிக்கைகளினாலும் ஒரு சிறந்த நிர்வாகியாகி, பல நெருக்கடிகளைக்கடந்து, மக்களுக்குப் பலவிதமான பணிகளை ஆற்றியிருக்கிறார். இதனால், புத்திசிகாமணி அவர்கள் பணியாற்றிய இடத்தைச் சேர்ந்த மக்கள் தங்களின் நெருங்கிய ஒருவராகவே இவரைப் பார்க்கின்றனர், உணருகின்றனர்.

பளை, சாவகச்சேரி போன்ற இடங்களில் திரு.புத்திசிகாமணி பணியாற்றியிருக்கிறார். இந்தப் பிரதேசங்களிலும் இவர் சிறந்த வகையில் ஆற்றிய பணியினாலும் மக்களிடத்தில் கொண்டிருந்த நல்ல உறவினாலும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்களின் நெருங்கிய உறவினராகவே திரு. புத்திசிகாமணியைக் கருதுகின்றனர். இதனால் இவரின் மீது பெருமதிப்பு வைத்துள்ளனர். இதனை நான் இந்தப் பிரதேச மக்களிடத்தில் கண்டிருக்கிறேன். ஒரு அரச அதிகாரி என்பதற்கு அப்பாலான உறவு மலர்ந்திருப்பதென்பது சாதாரணமானதல்ல. நற்பண்பும் அர்ப்பணிப்பு மிக்க சேவையுமே இந்த உறவுக்கும் மதிப்புக்கும் காரணமாகும் எனக் கருதுகின்றேன்.

ஒரு அரச அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெறும் போது அடைகின்ற மனத்திருப்தியை திரு. புத்திசிகாமணியின் சிறப்பு மீளவும் நிரூபிக்கப்படுகிறது. திரு. புத்திசிகாமணி பெருமையுடன் அடையமுடியும். ஆனால், மக்களின் மனதில் இவருடைய பணி ஓய்வென்பது ஏற்க முடியாத ஒன்றாகவே இருக்கும். ஏனெனில் மக்கள் ஒருபோதும் சிறந்த சேவையாளரை இழக்க விரும்புவதில்லை. அந்த வகையில் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்த திரு புத்திசிகாமணி அவர்கள் எமது மக்களுக்கும் பிரதேசத்துக்கும் ஆற்றிய பணிகளையும் அவருடைய சிறந்த, முன்மாதிரியான வாழ்வையும் கௌரவப்படுத்தி இவருடைய மணி விழா சிறக்க வாழ்த்துகிறேன்.

முருகேசு சந்திரகுமார்
நாடாளுமன்ற உறுப்பினரும்
நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும்.




### அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

சோர்வில்லாமை, எளிமையான தோற்றம், இளவயதுத் துடிதுடிப்பு, சிறந்த தலைமைத்துவப் பண்பு, எல்லோருடனும் இணைந்து செயலாற்றும் தன்மை போன்ற சிறப்பான பல பண்புகளுடன் வார்த்தெடுத்த எங்கள் புத்தி ஐயா அவர்கள் அண்மைக்காலத்தில் பளை, வலி. மேற்கு, கச்சேரி போன்ற அலுவலகங்களில் கடமையாற்றித் தற்போது சாவகச்சேரிப் பகுதிக்கும் தனது பணியைத் தொடர்ந்திருக்கின்றார். யாழில் ஆன்மீகப்பணி, சமூகப் பணி தொடர சுனாமி போன்ற அனர்த்தப் பகுதியில் இவரது மனிதாபிமானப் பணிதொடரும். இந்த அளவிற்கும் இவருக்குத் துணையாயிருப்பது கலை இலக்கிய ஆர்வலரான இவரது துணைவியாரே என்பதில் ஐயமேதுமில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

''பூமாலையில் ஓர் மல்லிகை'' பாடல் புகழ்பெற்ற இனிமையான பாடகன், சிறந்த கலைஞர், நல்ல நடிகன், பாரம்பரிய கலைகளை வளர்க்கும் ஆர்வலன், 1970 களில் உடுத்துறை முரசொலி நாடக மன்றத்தின் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெற்ற சமூக நாடகத்தில் பல மேடைகளில் பெண் வேடத்தில் பாத்திரமேற்றிருந் தமையாகும்.

யாழ். (YMCA) நிறுவனத்தின் தலைவராக இருந்து முதியோர், சிறுவர், இளைஞர்களுக்கான செயற்றிட்டங்கள், இடம்பெயர் மக்களுக்கான உதவிகள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான சமூகத் தொண்டுகள் போன்றவற்றினை ஆற்றி வருகின்றார். ஆன்மீகப் பணியாக தான் கடமையாற்றி சகல அலுவலகங்களிலும் ஒளிவிழாவை ஆரம்பித்து வைத்துள்ளார்.

''இன்பத் தமிழ்ப் பற்று உடையோனே வாழி
இனிய உன் வாழ்வு சிறந்தோங்க வாழி.
இசையால் இறைபுகழ் பாடி
இனிமையாய் வாழி
இல்லம் சிறக்க இன்மக்களுடன்
சீரும் சிறப் புடனே நீடூழி வாழி

திரு. மே. சாந்தசீலன்
பிரதேச சபை செயலாளர், நல்லூர்.
திருமதி அ. சாந்தசீலன்,
பிரதேச செயலாளர், சாவகச்சேரி.



### வாழ்த்துச் செய்தி

முப்பத்தைந்து வருட முனைப்பான சேவையில் தன் திற மையின் வழியில் படிப்படியாக முன்னேறி, தற்போது தென்ம ராட்சி நகர சபையில் தம் நற்பெயர் பொறித்து செயலாளராகப் பணியாற்றி 2013.04.26 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள திரு.சு. புத்திசிகாமணி அவர்களை உளம் நிறைவாக வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிய காலப் பகுதியில் நிர்வாக உத்தியோகத்தராக இவர் தரமுயர்ந்து, கிளிநொச்சி உதவித் திட்டப் பணிப்பாளராகவும், பளை உதவி அரசாங்க அதிபராகவும், சுழிபுரம் பிரதேச சபை செயலாளராகவும் கடமையாற்றிய காலத்தில்தம்மைப் பெற்றவரும், கொண்டவரும் குடும்பமும் மட்டுமன்றி சுற்றமும் பெருமைகொள்ளும் வண்ணம், அளப்பரிய சேவையை வழங்கிய நண்பர் சு.புத்திசிகாமணி அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

சேவைக்காலத்தில் கடமை மட்டுமன்றி, கண்ணியம் கட்டுப்பாடும் கொண்டு, சக உத்தியோகத்தர்களுடன் சிறந்த நட்பையும் நல்லுறவையும் பேணி வந்த இவரின் ஓய்வுக்காலம் நலமுடன் அமைய மனம் நிறைவாக வாழ்த்துகின்றேன்.

செல்வி. ஆர்.எஸ்.துரைராஜா,
பிரதிப் பிரதம செயலாளர்,
மாகாணப் பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்.



### நேர்த்தியான ஆளுமை உடையவர்

அரச பணியில் உள்ள ஒருவரது வாழ்வில் சேவைக்காலமும், ஓய்வுக்காலமும் அமைந்து விடுவது தவிர்க்க முடியா விட்டாலும் நிறைவாகப் பணியாற்றியவர்களது ஓய்வு சற்று வித்தியாசமானதுதான். முடியும் வரை சேவையாற்றினோம் என்ற திருப்தி இருந்தாலும் நிறுவனத்துடன் ஒன்றிணைந்த உறவு பிரியும் போது வாட்டுவதையும், அவரது பிரிவு மற்ற வர்களினை வாட்டுவதையும் பலரது அனுபவத்தின் வாயிலாக நான் அறிவேன்.

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் என்னுடன் சேவையில் சேர்ந்து பல பதவிகளினை வகித்து இன்று அறுபது அகவை காணும் திரு.சுப்பிரமணியம் புத்திசிகாமணி தனது வாழ்வில் பெரும்பகுதியினை சேவைக்காக அர்ப்பணித்தவர். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கையை தனது வாழ்வாக நினைத்து வாழ்ந்தவர். இவரது அன்பிலும் வழிகாட்டலிலும் உருவான அலுவலர்கள் உயர் பதவிகளினை வகித்தும் நல்ல மனிதர்களாகவும் இருந்து நற்பணியாற்றுகின்றார்கள். மணிவிழா நாயகன் ஓய்வு காலத்தில் பல பணிகளைப் புரிந்து பல சிறப்புக்களையும் பெற்று சந்தோசமாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

த.யோகராசா,
பிரதி ஆணையாளர், தொழில் திணைக்களம், கொழும்பு.



### வாழ்த்துச்செய்தி

உயர்திரு சுப்பிரமணியம் புத்திசிகாமணி அவர்கள் 25.01.1998 - 09.09.2004 வரைபளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபராகவும், பின் வலிகாமம் பிரதேசபையின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். 01.01.2012 தொடக்கம் இளைப்பாறும்வரை சாவகச்சேரி நகரசபையின் கௌரவ செயலாளராகப் பணிபுரிந்த திருவாளர் புத்திசிகாமணி அவர்களுடனான தொடர்பு இந் நகராட்சி மன்றத்தில் பதவி ஏற்றதன் பின் னரே எனக்கு ஏற்பட்டது. பார்வைக்கு எளிய தோற்றம்கொண்ட திருவாளர் யாவருடனும் அன்பாகவும் இலகுவாகவும் பழகுவதில் பெரும் செம்மல். உயர்ந்த பண்புகளின் உறைவிடமான வர். தனது அனுபவத்தாலும் அறிவினாலும் திணைக்களத்தை நல்ல வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் திறன் வாய்ந்த திருமகன். அகவை அறுபது கண்டாலும் தோற்றத்திலும் சுபாவத்திலும் செயற்பாடுகளிலும் அவ்வாறு கருதிவிடமுடியாது.

நாட்டை ஆளும் அரசனுடைய தோற்றம் பற்றி வள்ளுவப் பெருந்தகை கூறும்போது

கட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மிகக்கூறும் மன்னன் நிலம்

என்றார். அதற்கு முன் உதாரணகர்த்தாவாக திருவாளர் அவர்கள் திகழ்ந்தார் என்றால் அது மிகையில்லை.

அலுவலக செயற்பாடுகளில் மட்டும் அல்லாமல் பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் போதும் திருவாளர் அவர்கள் என்னுடன் தோளோடு தோள் சேர்ந்து ஆதரவளித்தவர்.

திசை எங்கும் புகழ்பூத்த திருவாளன் அகவை அறுபதிலே ஓய்வு பெற்றாலும் அவனியில் அனைத்தும் பெற்று நீடூழி வாழ இறை பணிந்து வாழ்த்துகின்றேன்.

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர், நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.



### சேவைநலன் பாராட்டு


புத்திசிகாமணி ஐயா அவர்களுக்கு மணிவிழா எடுப்பதையிட்டு நகரசபையினுடைய உறுப்பினர் என்ற வகையில் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவர் ஒரு பொறுப்புள்ள அரச அதிகாரியாக இருந்த போதிலும் மக்களுடன் இணைந்து வேலைகளை செய்வதில் அவருக்கு நிகர் அவரே.

பளை உதவி அரச அதிபராக கடமையாற்றியபோது அந்தப் பகுதி மக்களுடன் நன்மை, தீமை இரண்டிலும் பங்கெடுத்து கடமையாற்றியதுடன் அந்தப் பகுதி மக்கள் 2000 ஆம் ஆண்டு சொல்லொண்ணாத் துன்பங்களையும் மரண ஓலங்களையும் சந்தித் தபோது கடமைப் பொறுப்புக்கு அப்பாற்பட்டு எங்களுடனும், மக்களுடனும் இணைந்து துணிச்சலுடனும் மனிதநேயத்துடனும் செயற்பட்டதுடன் அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதிலும் வளர்த்து எடுப்பதிலும் அவர் பங்காற்றி இருந்தார். அந்தக் காலப்பகுதியில் அவரின் வினைத்திறனான அர்ப்பணிப்பான செயற்பாடே அந்தப் பகுதி மக்களின் ஒற்றுமையே பளை பிரதேசப்பகுதி திரும்பவும் புதுப்பொலிவுடன் அபிவிருத்தியில் மிளிர காரணமாக அமைந்தது. அவர் என்றுமே இறை அருளுடனும் ஆசீர்வாதத்துடனும் ஆசியுடனும் வாழ்ந்து நீண்ட காலம் நலத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.

சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர்
(சாள்ஸ்)
சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்.





# – மணிவிழா வாழ்த்து
# யில் ஓய்வுபெறும்
# காமணி அவர்கள்ின்
## ராட்டு விழா– 26.04.2013

ம்

வீடமைப்புத் திணைக்களம்
ப்பாணம், கொழும்பு).
தச செயலகம், சங்கானை, மாவட்ட
வாழ்வு செயலகம், யாழ்ப்பாணம்.
தச செயலகம், பச்சிலைப்பள்ளி - பளை.
ட்டச் செயலகம், கிளிநொச்சி.
தச செயலகம், மருதங்கேணி.
தச சபை, சுழிபுரம்.
ட்சி மன்றம், சாவகச்சேரி.

### கௌரவ வட மாகாண ஆளுநர் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



அரச சேவையாளர்களின் ஓய்வு என்பது தொழிலுக்கானது வாழ்க் கைக்கானது அல்ல என்பது முதுமொழி.

திருவாளர் புத்திசிகாமணி அவர்கள் நீண்ட காலமாக அரச சேவையில் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் பல்வேறு பொறுப்பான பதவிகளில் இருந்து மக்களுக்கு சிறப்பான சேவை செய்தவர். யாழ். மாவட்ட செயலகம், சங்கானை பிரதேச செயலகம் என்பவனவற்றில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலங்களில் அவருடைய சேவையை நேரடியாகக் கண்டுகொண்டுள்ளேன். அதன் பின்பு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உதவி அரசாங்க அதிபராகவும், அதன் பின்பு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் புனர்வாழ்வுக் கிளையில் உதவித்திட்ட பணிப்பாளராகவும் அதன் பின்பு யாழ். மாவட்ட செயல கத்தில் புனர்வாழ்வுக் கிளையில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றியுள்ளார்.

இக் காலகட்டங்கள் இடம்பெயர்வுகளும், அத்துடன் உயிர், சொத்து இழப்புக்கள் மலிந்த காலமாகும். மக்கள் தங்களின் அனைத்துத் தேவைகளுக்கும் அரச நிர்வாகிகளை நம்பியிருந்த காலம். இக் கால நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகளாக மாறி மக்களுக்குச் சேவை செய்த காலம். அரச நிர்வாகத்தை மக்கள் நிர்வாகமாக மாற்றி பணிபுரிந்த காலம். அதனால் தான் இவ்வளவு நெருக்கடிகளையும் எதிர்கொண்டு மக்களை வாழச் செய்தனர். இந்த அடிப்படையில் திருவாளர் புத்திசிகாமணியும் குறிப்பிடக் கூடியவ ராகக் காணப்பட்டார். அண்மைக் காலமாக சுழிபுரம் மற்றும் சாவகச்சேரி உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளராகப் பதவியேற்று உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பலப்படுத்தவும் அதனூடாக மக்களுக்குக் கிடைக்கும் சேவைகள் கிடைக்கப்பெறவும் சிறப்பாகச் சேவையாற்றியிருக்கின்றார்.

இவரின் சேவையால் பயனடைந்த மக்கள் இன்று இவரின் மணிவிழாக் கண்டு மகிழும் நாளில் இவர் ஆற்றிய பணியை நன்றியுணர்வோடு நினைவு கூருவதுடன் இவரின் ஓய்வுகால வாழ்வும் மக்களுக்கு பயன்படும் விதமாக சிறப்பாக அமையவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இ.இளங்கோவன்,
செயலாளர், ஆளுநர் செயலகம்.

### வாழ்த்துச் செய்தி



அரச சேவையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னரும் சக உத்தியோகத்தர்கள் மனதிலும், மக்கள் மனதிலும் இடம் பிடித்து வாழ்பவர்கள் ஒரு சிலரே உள்ளனர். இதற்குக் காரணம் அவ்வாறான உத்தியோகத்தர் தம் சேவைக்காலத்தில் ஆற்றிய உதவிகளும் ஏனைய உத்தியோகத்தர்களுடன் பழகிய தன்மையுமாகும். அந்த வகையில் உடுத்துறையைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியம் புத்திசிகாமணி அவர்கள் அரச பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவருடன் இணைந்து கடமையாற்றியவன் என்ற வகையில் அவரது அமைதியான பேச்சு பழகும் விதம் என்பது என்னை மிகவும் கவர்ந்தவை.

நீண்டகால நிர்வாக அறிவும் அலுவலக விடயங்களில் ஆழ்ந்த அனுபவமும் கொண்டுள்ள திரு.சு.புத்திசிகாமணி அவர்களை சங்கானை பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலத்திலிருந்து நான் அறிவேன். அதன் பின்னர் அவர் மாவட்ட செயலக புனர்வாழ்வுக் கிளையின் நிர்வாக உத்தியோகத்தராக, பளை பிரதேச செயலக பிரதேச செயலாளராக, வலிகாமம் மேற்கு பிரதேச சபைச்செயலாளராக இறுதியில் சாவகச்சேரி நகரசபை செயலாளராக பல பதவிகளில் அமர்ந்து அப் பதவிகளுக்கு பெருமை சேர்த்து ஓய்வு பெறுகின்றார். அடக்கத்துடன் இனிமையான பேச்சால் தன் கீழ்கடமையாற்றும் உத்தியோகத் தர்களை வழிநடத்தி அலுவலகக் கடமைகளை நிறைவேற்றுவதில் இவர் சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்தார்.

சிறந்த நிர்வாகியாக மட்டுமல்ல இவர் சிறந்த ஓர் கலைஞராகவும் விளங்கியவர். அதாவது தனது தந்தையாரின் கலைப் பணியூடாக தனது கிராமத்தில் ஓர் நாட்டுக் கூத்து நடிகராக இருந்தவர். அந்த வகையில் கலைத் துறைக்கும் பணியாற்றியவராக திரு.சு.புத்திசிகாமணி அவர்கள் விளங்குன்றார்.

இவ்வாறாக அரச துறையில் நிர்வாகியாகவும், கலைத்துறையில் வல்லவராகவும் திகழ்கின்ற திரு.சு.புத்திசிகாமணி அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைந்து அவர் தன் குடும்பத்தினருடன் நீண்ட ஆயுளுடன் வாழ இறைவனை வேண்டி அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பா.செந்தில் நந்தனன்,
பிரதேச செயலர், நல்லூர்.

### கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



இளமைத்துடிப்புள்ள செயல் வீரனாகவும் இறை நம்பிக்கையுள்ள ஆன்மீகப் பணியாளராகவும் எடுக்கப்பட்ட காரியத்தை துரித கதியில் நிறைவேற்றும் வல்லமை கொண்டவர் திரு.சு. புத்திசிகாமணி அவர்கள். இன்றும் கூட இளமைத்துடிப்புடனும் தூய சிந்தனையுடனும் அனைவரது மனதையும் கவர்ந்த நல்ல பண்பாளனாக சேவையாற்றி வருகின்றமை பாராட்டுக்குரியது. இவரது இறை நம்பிக்கையும் தன்னைப்போல் பிறரை நேசிக்கும் உயரிய பண்பும் இவருக்கே உரித்தான சிறப்பம்சமாகும்.

அரச சேவையில் எழுதுவினைஞராக அலுவலக வாழ்க்கைப் பயணத்தை 1979 ஆம் ஆண்டு ஆரம்பித்து இன்று சாவகச்சேரி நகர சபையினுடைய செயலாளராக ஓய்வுபெறுகின்றமையானது அவருடைய முயற்சிக்கும் செயற்திறனுக்கும் அர்ப்பணிப்புக்கும் கிடைத்த வெகுமதியாகக் கொள்ளலாம்.

முன்னாள் அரச அதிபர் கே.கணேஸ் அவர்களுடைய காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் திட்டப் பணிப்பாளராக கடமையாற்றியபோது என்னுடன் இணைந்து நிர்வாக உத்தியோகத்தராக அரும்பணியாற்றியவர் சு.புத்திசிகாமணி அவர்கள். யாழ். மாவட்டத்திற்கான தரைவழிப் போக்குவரத்து, உணவு விநியோகம் தடைப்பட்டிருந்த காலத்தில் என்னுடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தக் காலப்பகுதியில் மக்களுக் கான அத்தியாவசிய சேவைகளை ஆற்றுவதிலே எம்முடன் இணைந்து சிறப்பாகச் செயற்பட்டதுடன், இரவு பகல் பாராது மக்களுக்கான சேவையாற்றிய சு. புத்திசிகாமணி அவர்களின் ஓய்வுக் காலம் மிகச் சிறப்பாக அமையவும் அவர் குடும்பத்தாருடன் நோய் நொடியின்றி நீடூழி வாழவும் இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

ம.பிரதீபன்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

### உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்துச்செய்தி

இருபத்தாறாம் அகவையில் முகாமைத்துவ உதவியாளராகத் தடம் பதித்து பல்வேறு பதவிகளினை அலங்கரித்து மணிவிழாக் காணும் சுப்பிரமணியம் புத்திசிகாமணி அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடையகின்றேன்.

கடின உழைப்பும், சரியெனப்படுவதினை சொல்கின்ற குணாதிசயமும் கொண்டவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினைத் தனது அணிகலன்களாக்கொண்ட ஒரு பண்பாளன், தற்துணிவுடன் செயலாற்றும் செயல்வீரன், சிறந்த நிர்வாகியாக இரு பிரதேச செயலகங்களினையும் இரண்டு உள்ளூராட்சி மன்றங்களினையும் வழிநடத்திவரும் சிறந்த நடிகருமான இவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

மரியதாஸ் ஜெகூ
உள்ளூராட்சி ஆணையாளர்,
வடக்கு மாகாணம்.

### மீண்டும் ஜொலிக்கும் மாணிக்கம்




போர்ச் சூழல் புயலாக வீசிக்கொண்டிருந்த காலகட்டத்தில், பல்வேறு பட்ட பதவி நிலைகளில் நொந்துபோன மக்களுக்கு நொடியும் தவறாமல் பெரும் சேவையாற்றியுள்ளார். கடமையைச் செய்வதற்கு சாதி என்றும், சமயம் என்றும், உயர்வு என் பதும் தாழ்வு என்பதும் கட்சி என்பதுவும் கிடையாது என் பதை அவர் ஆற்றிய அர்ப்பணிப்பு நிறைந்த கடமை யிலிருந்து என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

நல்ல நடிகர், சிறந்த கலைஞன், உழைப்புக்கு அர்த்தம் புகட்டுகின்றதோர் சமூக சேவகன்.ஓர் சிறந்த மனித நேயம் படைத்தவராக நான் வலி. மேற்கு பிரதேச சபையின் உறுப்பினராகப் புகுந்தபோது அவரைக் கண்டுபழகினேன். உயர் திரு. புத்திசிகாமணி அவர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வது நாகத்திலிருந்து இரத்தினம் உதிர்ந்து போனா லும் அதுவிலை மதிக்கமுடியாத விக்கிரகம் ஒன்றிலே மீண்டும் ஜொலிக்கும் என்பது எனது நம்பிக்கை யாகும். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

சி. பாலகிருஷ்ணன்,
உறுப்பினர், சுழிபுரம் பிரதேச சபை.

### செயல் அறிந்து சேவை செய்த செம்மல்



செயல் அறிந்து களம் இறங்கி சேவையாற்றி, மக்களின் மனதில் குடிகொண்ட செம்மலின் சேவை களைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். புன்னகை பூத்த வதனம் கொண்ட புன்சிரிப்புடன் பல் லாயிரம் மக்களின் பல்துறைப் பிரச்சினைகளை தரம் வகுத்து. பதம் பார்த்து மனம் மகிழ தீர்த்து வைத்த வித்த கனை வாழ்த்துகின்றேன். குறிப்பாக பழம்பெரும் பச்சி லைப் பள்ளியின் பல்துறை அபிவிருத்தியில் பங்கு கொண்ட பங்காளி என்ற வகையில் அப்பகுதி மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டவர். சேவைக் காலத்தில் நேரம், காலம் பாராது வினைத்திறனுடன் சேவையாற்றி விளைதிறனைக் கூட்டிய விற்பன்னனின் சேவைகள் ஓய்வுக்காலத்திலும் தொடர வேண்டுமென்பதுடன் அர்ப்பணிப்புடனான அவரின் சேவைகள் ஓய்வு காலத்தில் மன மகிழ்ச்சியையும் வாழ்வில் சிறப்பையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. வளமுடன் வாழ வாழ்த்தும்

கந்தையா தெய்வேந்திரம்,செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.

### குறைதீர்க்கும் வள்ளல்



உடுத்துறை தந்த மணிவிழா நாய கன் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளி லும் வெவ்வேறு பதவிகளில் மக்கள் நலப்பணியாற்றியமை பாராட்டுதற் குரியது. எவரும் பாராட்டக் கூடிய வகையில் மக்கள் மத்தியில் எளியவராக, குறை தீர்க்கக் கூடியவராக விளங்கியுள்ளார்.

இவர் ஓர் நல்ல நிர்வாகி, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்தவர். பிரச்சினையான காலங்களில் பளை உதவி அரச அதிபராக இருந்த காலத்தில் கல்வித் துறைக்கும் ஏனைய சமூகத்துறைகளுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பல்வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுத் துள்ளார்.

இவர் எல்லாச் சமயத்தவரின் சமயச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்த விழாக்களை கொண்டாடச் செய்தவர். நாடகவிழா, விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றுக்கு ஊடாக கிராம மக்களை இணைத்தவர். நல்ல எழுத்தாளராகவும் நடிகராகவும் பணி புரிந்தவர்.

பல்வேறு பணிகளைப் பார் போற்றச் செய்த புத்திசிகாமணி அவர்கள் சாவகச்சேரி நகரசபையின் வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியுள்ளார். அகவை அறுபதினைக் கொண்டாடும் மணி விழா நாயகனுக்கு வாழ்த்துக்க ளைத் தெரிவிப்பதுடன் அவரும் அவரது குடும்பத்தினரும் சகல செல்வங்களும் பெற்று வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அ.கயிலாயபிள்ளை (அதிபர்),
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
(தேசிய பாடசாலை)

### வாழ்த்துச் செய்தி



சு. புத்திசிகாமணி அவர்கள் பழக இனியவர். அரச சேவையில் மிக மூத்த அதி சிறப்பு தர நிலை அதிகாரியாக விளங்கிய போதும் அனைவருட னும் அன்புடனும் பண்புடனும் பழகும் மனப்பாங்கு கொண்டவர்.

மிக நெருக்கடியான கால கட்டத்தில் பளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபராக இவர் ஆற்றிய சேவை எல்லோராலும் வியந்து பாராட்டப்பட்டது. மேலும் மாவட்ட செயலக புனர் வாழ்வுக் கிளையில் மிக மிக நெருக்கடியான காலகட்டத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி தனது திறமையை வெளிப்படுத்தியமையை நான் அறிவேன்.

தனது அரச சேவைக்கு மேலதிகமாக பொதுச் சேவையிலும் மிக மிக ஈடுபாட்டுடன் ஈடுபட்டவர் இவர். நீண்டகாலமாக யாழ்ப்பாண வை.எம்.சி.ஏ இல் தலைவராகவும் முக்கிய பதவியிலும் விளங்கி பல பணிகளை முன்னெடுத்து இன்றும் தொடர்கிறார். நல்லூர் புனித யாக்கோபு தேவாலயம் சார்ந்த பணிகளிலும் இவர் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

இன்று மணிவிழாக்காணும் மணிவிழா நாயகனை வாழ்த்துவதுடன் மேலும் பல செல்வங்களைப் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

இ.த.ஜெயசீலன் ,
பிரதேச செயலாளர்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

### அர்ப்பணிப்புள்ள செயல்வீரன்




எங்கள் மணிவிழா நாயகன் சுப்பிரமணியம் புத்திசிகாமணி அவர்களை வடமராட்சி மக்கள் சார்பாக வாழ்த்துவதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன். இவர் தேசிய வீடமைப்புச் செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகச் சேர்ந்து யாழ். மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் நிர்வாக உத்தியோகத்தராகவும், உதவி அரசாங்க அதிபராகவும், உதவித் திட்டப் பணிப்பாளராகவும், உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளராகவும் சீரிய பணியாற்றியவர். இடப்பெயர்வுக் காலங்களில் சரியான முடிவை விரைவாக எடுக்கும் சாணக்கியம் மிக் கவராகச் செயலாற்றியவர். அமைதியான சுபாவமுடையவராய் இருந்தாலும் துணிச்சல் மிக்கவர்.

இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்தும் இந்த வேளையில் இவர் தனது ஓய்வுக் காலத்தில் நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக வாழவும், சமய, சமூக மற்றும் எழுத்துப் பணியில் தொடர்ந்து பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இ.தர்மகுலசிங்கம்,
முன்னாள் அரச அதிபரும், கொழும்பு புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரும்.

### சேவைக்கான வாழ்த்து



உள்ளூராட்சித்துறையில் தனது பணியினை ஆற்றுவதற்கு முன்னர் எழுதுநர், நிர்வாக உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் என பல பதவி களை அலங்கரித்து அப்பதவிகளுக்கு கௌரவத்தினை ஏற்படுத்துவதற் காக அவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவையாகும்.

பொது நிர்வாக பணியாற்றலில் தனது சேவையினை வழங்கிய அதே வேளை சமூக சேவையாற்றலிலும் தனது வெவ்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தி எழுத்தாளராக, விமர்சகராக, அபிவிருத்திக் குழுக்களை ஒழுங்கமைப்பவராக, கலாசார மற்றும் பண்பாட்டு அம்சங்களின் கூட்டிணைப்பாளராக, ஏழை மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தொண்டு நிறுவனங்களின் தலைவராக, நிர்வாக உறுப்பினராக என தனது சேவையினை இடையறாது வழங்குவதில் முன்னின்று உழைத்தவரும் சமூகச் சீர்திருத்தத்திற்காக தனது பங்களிப்பை வழங்கியவருமான திருவாளர் சுப்பிரமணியம் புத்திசிகாமணி அவர்கள் - அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரது சேவை ஏனைய வழிகளில் பொதுச் சமூகத்திற்கு கிடைப்பதற்கு இறைவன் நிறைவான ஆசீரை அவருக்கு வழங்க வேண்டும் என வேண்டுவதுடன் அவரது ஓய்வுக்காலத்தில் அவரது வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையவும் இந்நாளில் மனதார வாழ்த்துகின்றேன்.

கோன்ஸ்ரன்ரைன் ஜக்சில் SLAS
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

### பண்புடைச் செம்மல் உயர்திரு. சு. புத்திசிகாமணி




இவர் பளைப்பிரதேச உதவி அரசாங்க அதிபராக 05.01. 1998ஆம் ஆண்டு நியமனம் பெற்று எமது பிரதேசத்திற்கு வருகை தந்த நாள் முதல் 09.09.2004 வரை அவரோடு எனக்குத் தொடர்பு இருந்தது. 01.01.1998 இல் நான் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதனால் அவரோடு நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டன. இவர் பளையில் பதவி வகித்த காலம் கிளிநொச்சி மாவட்டத்தின் நெருக்கடி மிகுந்த காலமாகும். ஒரு நிருவாக அதிகாரி எத்தகைய துன்பங்களுக்கெல்லாம் முகங்கொடுக்க வேண்டுமோ அத்தகைய துன்பங்கள் அனைத்துக்கும் துணிந்து நின்று முகம் கொடுத்தவர் தான் எமது உதவி அரசாங்க அதிபர்.

''காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மிகக்கூறும் மன்னன் நிலம்'' எனும் குறட்பாவின் பொருளுக்கேற்ப அனைவரையும் இன்முகம் காட்டி கருத்துக்களைக் கேட்டு உதவி புரிந்தவர் எமது உதவி அரசாங்க அதிபர்.

எமது பிரதேச உதவி அரசாங்க அதிபராக பதவியை அலங்கரித்த போது எமது மாவட்டத்தின் முதலாவது கலாசாரப் பேரவையை ஆரம்பித்த பெருமைக்குரியவர். சுருங்கச் சொல்லின் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களும் அவரும் உள்ளத்தால் என்றும் பிணைக்கப்பட்டவர்கள். நானும் பச்சிலைப் பள்ளியிலே பிறந்து வளர்ந்து வாழ்பவன் எனும் ரீதியிலே அவரது ஓய்வுக் காலம் பல்வளம் பெற்று பல்லாண்டு வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ப. அரியரத்தினம், ஓய்வுநிலை மேலதிக மாகாணக்
கல்விப்பணிப்பாளர், வட மாகாணம்.

# சேவை நலன் பாராட்டு



## திரு. சுப்பிரமணியம் புத்திசிகாமணி

(செயலாளர்,
சாவகச்சேரி நகராட்சி மன்றம்)



திணைக்களங்கள் செயலகங்கள் பற்பலநற் பணிசெய்து
திசையெங்கும் புகழளந்த திருவே உன்னை
அணைத்து அன்புபெய்து அகவை அறுபதிலே
அருளூற்று அவனிதனிலே அனைத்தும் பெற்று
துணைநல் லாள்மக்கள் தூய உறவுகளாய்
தூய்மைக் கலைப்பணிகள் பலவும் ஆற்றி
இணையில் இசைபரப்பி ஏற்றமொடு வாழ்கவென
இறைபணிந்து வாழ்த்துகின்றோம்.! வாழ்க! வாழ்க!

**சேவை விபரம்**

1979.04.18 - 1998.01.04 வரை -எழுதுநர் கச்சேரி, யாழ்ப்பாணம், கச்சேரி.
1998.01.05 - 2004.11.30 வரை -கிளிநொச்சி பளை பதில் உதவி அரசாங்க அதிபர்.
2004.12.01 - 2008.07.02 வரை -முகாமை உதவியாளர் கச்சேரி, யாழ்ப்பாணம்
2008.07.05 - 2011.12.31 வரை -செயலாளர், சுழிபுரம் பிரதேச சபை.
2012.01.01 - 2013.04.24 வரை -செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C9271)(10.7)

ஊழியர் நலன்புரி சங்கம்,
சாவகச்சேரி நகரசபை.

# மரண அறிவித்தல்கள்

## கந்தவனம் விவேகானந்தன்



நாவலர்மடம் நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தவனம் விவேகானந்தன் வியாழக் கிழமை 25.04.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் (பண்டிதர்) -பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், செல்வமலர், யோகமலர், அருளானந்தன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற இராஜரத்தினம் (சயன்ஸ் சென்ரர்) மற்றும் ஜெயபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், தேவச்சந்திரன், தயாளினி, சிவன், லோகநாயகி ஆகியோரின் மாமனாரும், கணேசலிங்கம், இராஜேஸ்வரி (லண்டன்), கந்தசாமி (மில் மாமா), புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும், ராஜ்மோகன் (லண்டன்), முருகதாஸ் (லண்டன்), வத்சலா (லண்டன்), அருள்மோகன் (லண்டன்), துஷ்யந்தினி ஆகியோரின் மைத்து னரும், பிரியதர்சினி, தாட்சாயினி தர்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.04.2013) வெள்ளிக் கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனந்த நிலையம்,
நவிண்டில், கரவெட்டி.
T.P-077 987 6161, 021 226 2426

(35340)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஞானேந்திரன் பிரசாத்



[யாழ் பல்கலைக்கழக 3 ஆம் வருட முகாமைத்துவ பிரிவு மாணவன்]

மன்னார், இலுப்பைக்கடவையைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஞானேந்திரன் பிரசாத் 23.04.2013 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஞானேந்திரன் (உப தபால் ஊழியர், இப்பைக் கடவை, மன்னார்) - ரஜனி தம்பதியரின் மூத்த மகனும், திசான் லிதியாவின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (உப தபால் அதிபர், இலுப்பைக் கடவை, மன்னார்), சீதேவிப் பிள்ளையின் அன்பு பேரனும், காலஞ்சென்ற துரைசிங்கம், அன்னம்மா வின் அன்பு பேரனும், தர்மலிங்கம் ராஜேஸ்வரியின் (சுவிஸ்) அன்பு மாமனும், ரகு, ரமேஷ், ரவி, ரஞ்சித், ரதிந்திரன் ஆகியோரின் மாமனும், வாகினி, சசிகலா, கலா, தர்சா, கவிதா ஆகியோரின் மாமனும், சுப்பிரமணியம் (சுவிஸ்), கௌசலா ஆகி யோரின் பெரியப்பாவும், ராஜேந்திரன் (ஜேர்மனி), பகிரதி,யோகானந்தன் (போதகர்) றமணி ஆகியோரின் சித்தப்பாவும், சர்மிலா, சகனா (ஜேர்மனி), விதுசன், டிலான் (சுவிஸ்), றெபேக்கா, நிலுஷா, சாரோன் எபிரோன் சிம்ரோன் ஆகியோரின் அன்பு சகோதரனும், கோபிகா, கோகுலன் (சுவிஸ்), நிறேஞன், ஜனோஞன், அஜிஞன், பிரதீப், பிரலன், ஸ்ரீபன், கேசினி, சிவப்பிரியா, விதுஷா, சஞ்சீபன், சந்தோஷ், விதுஷன், மிதுஷன், அபிசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரில் இறுதி அஞ்சலி இன்று (26.04.2013) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கிழக்கு சவக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(36381)(6.7.11)

தகவல்: குடும்பத்தினர்.

# பொது நூலக நடமாடும் சேவை சங்கானையில்

யாழ்ப்பாணம்,ஏப். 26

யாழ்.பொது நூலகத்தின் நடமாடும் சேவை இன்று முற்பகல் 9 மணிக்கு சங்கானை 'ப்வட்டபிளை' இன்ரநஷனல் பாடசாலையில் நடை பெறவுள்ளது.

மாணவர்களுக்கு நூலகப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவையில் நூல்கள் காட்சிப்படுத்தல், சிறார்களுக்கான வர்ணம் தீட்டுதல், கதை கூறுதல் சொல்லாக்கச் சிறுவர் பாடல்கள், கதை கூறுதல், வீடியோ கட்சிகள் போன்ற அம்சங்கள் உள்ளடங்குகின்றன.

எனவே மாணவர்கள் அனைவரும் குறித்த நேரத்துக்கு வருகை தருமாறு பாடசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-16)

## செல்வா ஆவணத் திரைப்படம்

இன்று வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி றொமெய்ன் மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது.

செல்வநாயகம் ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம)

## பரிசில் வழங்கல்

கிளிநொச்சி,ஏப்.26

கிளிநொச்சி, வடக்கச்சியில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டக்கச்சி பொதுநூலகத்தில் நடை பெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் ஞா.குகராசா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் சி.சின்னராசா கலந்துகொள்வார். (ஐ-6)




# நூல் வெளியீடு

சி.இராஜினிதேவியின்
## நிலவும் சுடும்
சிறுகதைத் தொகுப்பு
நூல் வெளியீடு


இடம்: யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
காலம்: 27.04.2013 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 9.00 மணி
தலைவர்:- திரு.க.இ.இராசசேகரம்
[அதிபர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி]
வெளியீட்டுரை:- பேராசிரியர் S.சிவலிங்கராஜா
[ஓய்வுநிலை தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்]
நூல் அறிமுக உரைகள்:-
01. திரு.இ.இராஜமகேந்திரன்
[அதிபர் யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி]
02. திரு.சு.சிவநேசராஜன் (ஆசிரியர்)
ஏற்புரையும் நன்றியுரையும்: நூலாசிரியர்

"கலை இலக்கிய ஆர்வலர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

திரு.திருமதி சிவலிங்கம்
"பழமுதிர் சோலை",உடுவில் கிழக்கு, சுன்னாகம். (36392)(7.2)

# மரண அறிவித்தல்

## கந்தையா இரத்தினசிங்கம் (தம்பிராசா)



பொன்னாவளை, களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும் மொந்திபுலம், வலந்தலை, காரைநகரை வசிப்பிடமாகவும் தற்பொழுது தங்கோடை, காரைநகரில் வசித்து வந்தவருமான கந்தையா இரத்தினசிங்கம் (தம்பிராசா) 25.04.2013 காலை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சுப்பிரமணியம், காலஞ் சென்றவர்களான சின்னத்துரை, மகேசன் மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், சிவபாக்கியம், காலஞ் சென்ற சிவமணி மற்றும் நேசரத்தினம், நாகேஸ்வரி ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, செல்வராசா, புவனேஸ்வரி, பேரின்பராணி (லண்டன்) ஆகியோரின் தந்தையும், பரமநாதன், நாகேஸ்வரி, சற்குண ராசா, விக்கினராசா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சுபத்திரா, கஜவதனன், யசோதரன், பிரியதர்சினி, சுபாசினி, சாய்சங்கர், சாய்கணேஷ், சிவகாமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தங்கோடை,
காரைநகர்.
077 659 9340 (36398)(6.7.11)

தகவல்:
இ.செல்வராசா
(மகன்.)

# மரண அறிவித்தல்

## சண்முகம் திருவாதவூரன்



பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாக வும் ஆஸ்திரேலியா, சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் திருவாதவூரன் 23.04.2013 செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவில் இறை பதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சோமசுந்தரநாயகி தம்பதியரின் அன்பு மகனும் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், இராஜநாயகியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற நாகராஜேஸ்வரி மற்றும் அமிர்தயோகம், தில்லை நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற குணரத்தினம் மற்றும் முத்துக்குமாரசாமி, ரஞ்சிதா ஆகியோரின் மைத்துனரும், லலித்ரூபன், யதீஸ்ரூபன், கோகுலரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நர்த்தலோஜினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2013 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னாலை, தெல்லிப்பழை. (2.6.7)(36383)

தகவல்:
குடும்பத்தினர்.